# பாராளுமன்றத் தேர்தல் 2014

## மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்திவாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்க எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வீர்!

# பாட்டாளி சிந்தனை


**சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா**

**SUCI**

**தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்**

Volume 24 No. 8 | April 2014 | விலை ரூ 5

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி மக்களுக்கு விடுக்கும் அறைகூவல் | 3 |
| 2. | தமிழ்நாட்டில் மக்கள் தற்போது சந்தித்துவரும் வாழ்க்கைச் சூழ்நிலைமையும் | 11 |
| 3. | கேரளாவில் இடது ஐக்கிய முன்னணி LUF அமைப்பு | 27 |
| 4. | எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி எம்.பியும் எம்எல்ஏவும் ஆற்றிய பணிகளில் சில... | 28 |
| 5. | பீகாரில் 6 இடதுசாரி கட்சிகள் கூட்டணி | 28 |
| 6. | மோடிக்கு எதிராக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர் | 29 |
| 7. | ஆந்திராவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்சிபிஐ(யு) கூட்டணி | 29 |
| 8. | தமிழ்நாட்டில் போட்டியிடும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளர்கள் | 30 |
| 9. | கோரிக்கைகள் | 31 |

## பாராளுமன்றத் தேர்தல் 2014

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி மக்களுக்கு விடுக்கும் அறைகூவல்

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பிரதான போட்டியானது பூர்ஷ்வா கட்சி களான காங்கிரஸ், பிஜேபி கட்சிகளுக் கிடையில் இருந்தபோதிலும் தாங்களே "வளர்ச்சி"யின் நாயகர்கள், ஊழலுக் கெதிரான "போராளிகள்" என தம்பட்டம் அடித்துக் கொண்டு அனைத்து பிராந்திய பூர்ஷ்வாகட்சிகள் மற்றும் சமூக ஜனநாயக வாதிகள் என்றழைக்கப் படும் சிபிஐ(எம்), சிபிஐ போலிகம்யூனிஸ்ட் கட்சிகளும் போட்டி யிடுகின்றன. அவர்களுடைய பெருமைகள், பெரிய பெரிய வாக்குறுதிகள், ஒருவர்மீது மற்றொருவருடைய தூற்றல்களை யெல்லாம் எப்பொழுதும்போல் காதுகிழியும் பெரும் பிரச்சாரத்தை ஊடகங்கள் செய்து வருகின்றன.

*1952*–யின் முதல் பொதுத் தேர்தலி லிருந்து பல தேர்தல்களையும் அரசாங்கங் களின் மாற்றத்தையும் மக்கள் பார்த்தாகி விட்டது. இது 16வது பொதுத்தேர்தலாகும். கடந்த தேர்தல்கள் மக்கள் வாழ்வில் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது? பல்வேறு கொடிகளைக்கொண்ட இக் கட்சிகள் எவ்வளவு வேண்டுமானாலும் பெருமையடித்துக் கொள்ளலாம். ஒருசில ஏகபோக, கார்ப்பொரேட் மற்றும் மிகப் பெரிய வியாபார குழுமங்களே நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வை விலையாகக்கொடுத்து வளமடைந்து, மலை போல் செல்வத்தை குவித்து வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதுவே உண்மை யாகும். எனவே கோடிக்கணக்கான மக்கள் நீடித்த வறுமையிலும் பட்டினியிலும் மருத்துவ வசதியின்றியும் துன்பத்துடன் வாழ்ந்துவருவதிலும் *77%* மக்கள் நாளொன்றுக்கு ரூபாய் *23* கூட செலவு செய்யமுடியவில்லை என்பதிலும் வியப்பேது மில்லை கோடிக்கணக்கான விவசாயிகளும் விவசாயத்தொழிலாளர்களும் வேலைதேடி நகரங்களுக்கு கொத்துக் கொத்தாக வருகின்றனர். லட்சக்கணக்கான விவசாயிகள் கடன்பொறியில் சிக்கி தற்கொலை செய்து கொள்கின்றனர். பிச்சை, விபச்சாரம், பெண் களையும் குழந்தைகளையும் கடத்தி விற்பனை செய்தல் மற்றும் அவர்களுக்கெதிரான குற்றங்கள் அதிகரித்தவண்ணமே உள்ளன.

மறுபுறத்தில் *122* பில்லியனர்களைக் கொண்டு உலகின் 5வது இடத்திலும் உலகின் முதல் *10* பில்லியனர்களில் *5* பேரைக் கொண்டும் இந்தியா காட்சிதருவதை நாம் காணமுடிகிறது. ரொக்கமும் சொத்துக் களையும் பில்லியன்களில் வைத்துக் கொண்டு அனைத்து பூர்ஷ்வா கட்சிகளின் மந்திரிகளும் தலைவர்களும் ஊழலில் முழுக்க மூழ்கியிருக்கிறார்கள். இந்திய ஜனநாயகத்தின் சிகரமான லோக்சபாவில் கூட அதன் *543* உறுப்பினர்களில் பெரும் பாலும் காங்கிரஸ், பிஜேபி, பிராந்திய கட்சிகள் மற்றும் சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள் உட்பட *321* பில்லியனர்களையும் *180*

மில்லியனர்களையும் பெற்றிருக்கிறது. இந்திய தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகளின் தனிப்பட்ட கணக்குகளில் – 72 லட்சம் கோடிகள். அவையனைத்தும் கறுப்புப்பணமே – உலகின் மிக அதிகமாக வைத்திருக்கும் நாடாக இந்தியா இருப்பதாக சுவிஸ்வங்கியின் அதிகாரிகள் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்.

பன்னாட்டு கம்பெனிகள், கார்ப் பொரேட்டுகள், ஏகபோகங்களின் கட்டளைக் கிணங்கி உலகமய, தாராளமய, தனியார்மயக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் தங்களின் திறமையையும் விசுவாசத்தையும் காட்டுவதில் மத்தியிலும் மாநிலத்திலுமுள்ள இந்த ஆளும் பூர்ஷ்வா கட்சிகள் தங்களுக் கிடையில் போட்டி போட்டுக் கொள்கின்றன.

இதன்விளைவாக, தொழிற்சாலைகளில் பணியாட்களைக் குறைத்து, ஆலைமூடல் மற்றும் லாக்அவுட்கள், வேலைகளை நீக்குவது, நிரந்தரப் பணிகளை காண்ட்ராக்ட் வேலைமுறையால் இடமாற்றம் செய்வது, வேலைநேரத்தையும் வேலைச்சுமையையும் நீட்டிப்பது, அவுட்சோர்சிங், சம்பளஉயர்வு முடக்கம் சம்பளவெட்டு ஆகியன சர்வ சாதாரண விஷயங்களாகிவிட்டன. மத்தி யிலும் மாநிலத்திலுமுள்ள அரசாங்கங்கள் தொழிலாளர்களின் அனைத்து உரிமை களையும் திரும்பப் பெறுகின்றன மறுபுறம் பொதுத்துறையை தனியாரிடம் ஒப்படைக் கின்றன சுரங்கங்கள், விவசாய நிலங்கள், ஆறுகள், சில்லறை மற்றும் மொத்த வணிகத் தையும்கூட பன்னாட்டு கம்பெனிகள், கார்ப்பொரேட்டுகளின் ஆதிக்கத்திற்கு அனுமதிக்கின்றன. வரித்தள்ளுபடிகள், வரி விலக்குகளின் வடிவத்தில் தொழில் குழுமங் களுக்கு பெரும் தொகை வாரி இறைக்கப் படுகிறது. இதனால் ஏற்படும் பட்ஜெட் பற்றாக்குறையானது வரி உயர்வு மற்றும் நலத்திட்டங்களில் வெட்டு எனும் வடிவில் சாதாரண மக்களின் தலையில் சுமத்தப் படுகிறது.

தொடர்ச்சியான விலை ஏற்றம், வரி உயர்வுகள், பணமதிப்பின் வீழ்ச்சி ஆகிய அனைத்தும் மொத்தமாக சேர்ந்து மக்களின் துயரத்தை அதிகரிக்கிறது. விவசாயிகளை வலுக் கட்டாயமாக அப்புறப்படுத்துவதன் மூலம் சிறப்புப்பொருளாதார மண்டலங் களுக்காக விவசாய நிலங்கள் அபகரிக்கப் படுகின்றன. மத்திய, மாநில அரசாங்கங்களின் முன்தடுப்பு அல்லது நிவாரண நடவடிக் கைகள் எதுவுமில்லாததால் புயல், வெள்ளம், வறட்சி ஆகிய இயற்கைப் பேரழிவுகள் மனித உயிர்கள், ஆயிரக்கணக்கான பயிர்கள் மற்றும் சொத்துக்களை அழிக்கின்றன. விதைகள், மின்சாரம், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகையில் விவசாயிகளுக்குமட்டும் ஆதார விலை மறுக்கப்படுகிறது. வணிகர்கள், பதுக்கல்காரர்கள், கறுப்புச்சந்தைக்காரர்கள் தங்கள் இஷ்டத்திற்கு விலைமுறைகேடுசெய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மத்திய, மாநில அரசாங்கங்களும் கல்வி, சுகாதாரத்திற்கான பட்ஜெட்டை குறைத்து, மிக அதிகபட்ச லாபமடைய இத்துறைகள் தொழில் மற்றும் வியாபாரக் குழுமங்களிடம் விடப்பட்டு விட்டன. கல்வியும் மருத்துவமும் சாதாரண மக்களின் கைகளுக்கு எட்டாது வெகுதூரம் சென்றுவிட்டன. மதசார் பின்மை, ஜனநாயக, விஞ்ஞானபூர்வ அணுகு முறை மற்றும் கண்ணோட்டத்திற்கு பதிலாக குருட்டுநம்பிக்கை, மத வெறித்தனம், மதிப்புக்கள் மற்றும் சமூக அக்கறையிலிருந்து விடுபட்ட பாசிச கலாச்சாரத்தை உருவாக்கும் வகையில் பள்ளிப்பாடத் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மாணவர்களுக்கு உயர் கல்விக் கான கதவுகள் மூடப்படும்பொருட்டு, பள்ளி களில் தேர்வுமுறைகள் நீக்கப்படுகின்றன ஆனால் பணக்காரர்களுக்கான ஆங்கிலவழிப் பள்ளிகளில் அத்தேர்வுமுறைகள் தொடரு கின்றன.




*பாராளுமன்றத் தேர்தலையொட்டி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டியின் அறைகூவலையும் வேட்பாளர் பட்டியலையும் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் கொல்கத்தா பிரஸ் கிளப்பில் மார்ச் 4, 2014 அன்று வெளியிட்டார். அவருக்கு இடதுபுறம் தோழர்கள் மணிக் முகர்ஜி, சங்கர் சாஹா, வலதுபுறம் தோழர்கள் சௌமன் பாசு, சாயா முகர்ஜி ஆகிய மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் உள்ளனர்.*

ஆளும்வர்க்கத்தின் நம்பிக்கைக்குரிய இக்கட்சிகள் 'வளர்ச்சி'யின் 'சிறந்த நிர்வாக'த்தின் கட்டம் என இதைத்தான் முன்னிறுத்துகின்றன. இங்குதான் யாருடைய வளர்ச்சி எனும் மிகமுக்கிய கேள்வி எழுகின்றது.

இன்றைய நெருக்கடிசூழ்ந்த அழியும் தறுவாயிலுள்ள முதலாளித்துவ அமைப்பின் உண்மை காட்சியை இதுவரை கண்டோம். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' எனும் பதாகையைத் தாங்கி மதமூடத்தனத்திற்கெதிரான மதசார்பற்ற மனிதநேயத்தை உயர்த்திப்பிடித்து நிலப்பிரபுத்துவம், எதேச்சாதிகாரம் மற்றும் முடியாட்சியை எதிர்த்துப் புரட்சிகரப் போராட்டத்தை நடத்தி, அப்போதைய வரலாற்றுக்கட்டத்தில் ஜனநாயக அமைப்பை நிறுவமுடிந்த 18 அல்லது 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாளித்துவ அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும் இன்றைய முதலாளித்துவம். பிற்போக்கு, மரணப்படுக்கையிலுள்ள ஏகாதிபத்திய கட்டத்தில் அதே பதாகையை முதலாளித்துவ அரசு இன்று ஏறி மிதிக்கிறது. தானே கீழிறக்குகிறது. தற்போது அது முழுவதும் பிற்போக்கு, ஒடுக்குமுறை, பாசிச மற்றும் அனைத்து ஜனநாயக வெகுஜன போராட்டங்கள், உழைக்கும் வர்க்க போராட்டங்களை இரக்கமற்று ஒடுக்குகின்ற, அனைத்து ஜனநாயக நியமங்கள், மதிப்புக்கள் மற்றும் நடைமுறைகளை அழிக்கக்கூடியதாக மாறிவிட்டது.

மரணப்படுக்கையிலுள்ள உலக முதலாளித்துவத்தின் பங்கும் பகுதியுமாக 1947ல் அதிகாரத்தைக் கைப்பற்றியநாள் முதலாகவே இந்திய முதலாளித்துவம் அதே பிற்போக்குக் கொள்கையை கடைபிடித்து வருகிறது. ஒருசிலரின் கைகளில் ஏகபோக மூலதனத்தைக் குவித்துக் கொண்டு, அரசின் கைகளில் அரசியல் அதிகாரத்தை மையப்படுத்திக்கொண்டு, படைமுறைப்படுத்தப்பட்ட சிந்தனைகளுடன் தற்போது நாடு பாசிச அபாயத்தை எதிர்கொண்டு நிற்கிறது. நமது பொருளாதாரம் மற்றும் அரசியலில் பிராந்திய மூலதனமானது இன்னும் ஒரு

# ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலால் மக்களின் துன்பமும் துயரமும் அதிகரித்து வருகிறது

குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றிக்கொண்டிருப்பதனால், தங்கு தடையற்ற பாசிசத்திற்கு தடையாக இருந்து வருகிறது.

ஜனநாயகக் கோட்பாடுகள், மனிதநேய மதிப்புகள் பற்றியோ, நாட்டைப்பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ இன்று முதலாளித்துவவாதிகளுக்கு ஒரு கவலையும் இல்லை. அவர்களுடைய ஒரே கவலை இரக்கமற்ற சுரண்டலின் மூலம் எப்படியாவது மிகஅதிக லாபத்தை ஈட்ட வேண்டுமென்பதே. அவர்களுக்கு மக்கள் என்பவர்கள் சுரண்டல் அரவை இயந்திரத்திற் கான மனித மூலப் பொருட்களேயன்றி வேறொன்றுமல்ல, நாடு என்பது கொள்ளையடிப்பதற்கான ஒரு பரந்துபட்ட சந்தையேதவிர வேறொன்றுமல்ல, முதலாளிவர்க்கம் முழுக்க முழுக்க மனிதத்தன்மையற்ற, ஒழுக்கநெறியற்ற, ஊழலில் மூழ்கித்திளைக்கின்றதாக ஆகிவிட்டது. எனவே ஆளும் முதலாளித்துவவாதிகளுக்கு சேவைசெய்யும் காங்கிரஸ், பிஜேபி மற்றுமுள்ள பிராந்திய கட்சிகளின் மந்திரிகளும் அக்கட்சிகளின் தலைவர்களும் ஊழல்வாதிகளாகவும் வேஷதாரிகளாகவும் மக்கள்விரோதிகளாகவும் இருப்பதில் வியப்பேதுமில்லை. ஊழல் முறைகேடுகளுக்கு சிபிஐ(எம்)ஐ சேர்ந்த சில தலைவர்கள்கூட பலியாகியிருக்கின்றனர்.

ஆட்சியில் இருந்தபோது இக்கட்சிகள் மக்கள் விரோத கொள்கைகளைப் பின்பற்றுவது, வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை இரக்கமற்று நசுக்குவது போன்றவற்றை மட்டுமல்ல, மக்களின் தார்மீக முதுகெலும்பை அழிப்பதிலும்கூட ஈடுபட்டிருக்கிறார்கள். வரலாற்று சிறப்புமிக்க ஒளி பொருந்திய இந்திய மறுமலர்ச்சி இயக்கம் மற்றும் விடுதலை இயக்கம் குறிப்பாக புரட்சிகர நீரோட்டத்தை அழிக்க ஆளும்கட்சிகள் தன்னாலான அனைத்தையும் செய்து வருகிறார்கள். சிந்தனைத் திறனையும் அதிருப்திக்குரலையும் வெளிப்படுத்தும் போராடும் தைரியத்தையும் அழிக்கும் பொருட்டு குறிப்பாக இளம்தலைமுறையினரை நெறியற்றவர்களாக்கி தார்மீக முதுகெலும்பை அழிக்க மிகுந்த கெடு நோக்கத்துடனான சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அச்சு மற்றும் எலக்ட்ரானிக் ஊடகங்கள் மூலம் ஆபாசம், உணர்வைத் தூண்டும் படங்கள், வன்முறை மற்றும் போதைவஸ்து, மது, சூதாட்டம் போன்றவற்றின்மூலம் அனைத்து நெறியற்ற செயல்களிலும் ஈடுபட மாணவர்களும் இளைஞர்களும் தள்ளப்படுகிறார்கள். பெண்கடத்தல், பலாத்காரம், கும்பல் பலாத்காரம் மற்றும் கொலைகளில் இந்தியா தற்போது முன்னணியில் இருப்பதானது ஏதோ தற்செயலானதல்ல. சிலமாதங்களே ஆன பெண் குழந்தை முதல் 60 வயது முதியபெண் உட்பட எவரும் விடப்படுவதில்லை. இப்படிப்பட்ட கொடிய குற்றங்களைப்புரிந்தவர்கள் நிச்சயமாக மிருகங்களல்லர். ஆனால் மனித மனசாட்சி மற்றும் மதிப்புகளிலிருந்து விடுபட்ட மனிதபிறவிகளே, இந்த சீரழிந்த முதலாளித்துவ கலாச்சாரம் உற்பத்தி செய்த புதுவகை உயிரினத்தவரே. இவ்வாறு பொருளாதாரரீதியாக, அரசியல்ரீதியாக, சமூகரீதியாக, கலாச்சாரரீதியாக, தார்மீக மற்றும் நீதிநெறிரீதியாக வாழ்வை முதலாளித்துவம் அழித்துவருகிறது. சமூக மற்றும் குடும்பத்தின் அமைதியை முதலாளித்துவம் அழித்து வருகிறது. சமூகவளர்ச்சி மற்றும் தேவைகளுக்கு முதலாளித்துவம் தடையாக

நிற்கிறது. ஒரு புதிய அமைப்புமுறையால் அதாவது சோசலிச அமைப்பு முறையால் அது இடமாற்றம் செய்யப்பட வேண்டி யிருக்கிறது. இதுதான் மார்க்சிசம்– லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் வரலாற்றுப் பாடமாகும்.

தேர்தலானது அரசாங்கங்களை மட்டுமே மாற்றும். ஆனால், சுரண்டல் முதலாளித்துவ அமைப்பை அதன் ஒடுக்குமுறை அரசு இயந்திரத்தை மாற்றாது. தேர்தல்களை நடத்துவதன்மூலம் ஆளும் முதலாளித்துவ வாதிகள் தங்களுடைய தேவைக்கேற்றார் போல் அரசியல் மானேஜர்களை ஆட்சியில் அமர்த்துவதையோ அல்லது அதன் மூலம் வேறொருவரைக் கொண்டு இடமாற்றமோ செய்து மக்களை ஏமாற்றியும் புரட்சியின் பாதையிலிருந்து திசைதிருப்பவும் செய் கின்றனர். புரட்சியின் பாதையிலிருந்து வெகுஜனங்கள் விலகியிருக்கும் பொருட்டு அவர்களுடைய அரசியல் மானேஜர்களை மட்டுமே இடமாற்றம் செய்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்தல் களானது அவ்விடத்திலும் மக்களின் உண்மையான தீர்ப்பை அல்ல, மாறாக, பணபலம், அடியாள் பலம், ஊடகங்களின் பலத்தைக்கொண்டு பூர்ஷ்வாக்களின் தீர்ப்பைப் பிரதிபலிக் கின்றன.

பல பத்தாண்டுகளாக மத்தியிலும் பல்வேறு மாநிலங்களிலும் காங்கிரஸ்தான் பதவியில் இருந்தது. இரண்டுமுறை மத்தி யிலும் தற்போது பல மாநிலங்களிலும் பிஜேபியானது பதவியில் இருக்கிறது. சமாஜ்வாதி, பிஎஸ்பி, திமுக, அதிமுக, அகாலிதள், சிவசேனா, என்சிபி, ஐக்கிய ஜனதாதள், பிஜேடி, தெலுகுதேசம், ஏஜிபி, சிபிஐ(எம்), திரிணமூல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருந்தன, இருந்துவருகின்றன. இக்கட்சிகளின் கொடிகள் மற்றும் பெயர்களில் வேறுபாடே தவிர அவர்களின் கொள்கைகள் அல்லது அவர்களின் ஆட்சிசெய்த விதம் ஆகியவற்றில் எள்ளளவும் வித்தியாசம் இல்லை.

காங்கிரஸ் தன்னை 'மதசார்பற்ற கட்சி' என சொல்லிக்கொள்கிறது. கம்யூனிஸ்ட் என்றழைக்கப்படுகிற சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள் காங்கிரஸ் இந்த தோற்றத்தைப் பெற உதவியது. எது எப்படியிருந்தபோதும் அவர்கள் பின்பற்றியது மதசார்பின்மை அல்ல. ஆனால் அனைத்து மதங்களுக்கும் சமமான ஆதரவு அல்லது 'சர்வதர்ம சம்பவா' என்பதாகும். ஆனால், வரலாற்று ரீதியாக, சித்தாந்தரீதியாக அரசு மற்றும் கல்வி உட்பட அதன் அனைத்து அமைப்புக்களையும் மதத்தின் செல் வாக்கிலிருந்து விடுவிப்பது மற்றும் மதசார்பற்ற ஜனநாயக கோட்பாடு களின் அடிப்படையில் அதன் அனைத்து விவகாரங்களையும் நிர்வகிப்பது என்பதுவே உண்மையான மதசார்பின்மைக்கு அர்த்த மாகும். மதச்சார்பின்மை என்பது மதத்தை ஒரு தனிநபரின் தனிபட்ட விவகாரமாகவே கருதுகிறது, அது மத விவகாரங்களை ஆதரிப்பதும் இல்லை, அதில் தலையிடுவது மில்லை. மத நம்பிக்கையுடையவரையும் மதநம்பிக்கையற்ற வரையும் சமமாகவே பாவிக்கிறது. விடுதலை இயக்கத்தின்போது அனைத்து மதங்களுக்கும் சமமான ஆதரவை அளிக்கிறோம் எனும்பெயரில் காங்கிரஸ் தலைமையானது உயர்ஜாதி இந்துஅரசியலை அப்பட்டமாக பின்பற்றியதன் மூலம் முஸ்லீம் களையும் 'கீழ்ஜாதி' இந்துக்கள் என்றழைக்கப் பட்டவர்களையும் சுதந்திரப் போராட்டத்தி லிருந்து அந்நியப்படுத்தி அதன்மூலம் மக்களைக் கூறு போடச் செய்து நாட்டைக் கூறுபோட பிரிட்டி ஷாருக்கு உதவி விட்டனர். ஒரு வாக்குவங்கியை உருவாக்கிக் கொள்ளவும் உழைக்கும் மக்களிடையே பிளவை உண்டாக்கும் ஒரே நோக்கத்துடன் **1984**ல் நடைபெற்ற சீக்கிய எதிர்ப்பு கலவரம் உட்பட ஏராளமான கலவரங்களை காங்கிரஸ் கட்சி தூண்டிவிட்டது.

இந்துத்துவாவை பாதுகாக்கும் சேம்பியனாக பெருமையுடன் தன்னை கூறிக்கொள்ளும் பிஜேபியானது அத்வானி ரத யாத்திரை, பாபர்மஜீத் தரைமட்டமாக்கல் மற்றும் கோத்ரா ரயில் விபத்தைத் தொடர்ந்து **2500**க்கும் மேற்பட்ட முஸ்லீம்களை படுகொலை செய்ததன்மூலம் முஸ்லீம் விரோத பகையுணர்வை தூண்டிவிடும் கருவியாக இருந்தது. சைதன்யா, ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோரைவிட இந்த வெறியர்கள் என்ன அவ்வளவு இந்துமதப் பற்றாளர்களா அவர்கள் இந்துக்களா என ஒருவர் வியப்படையமுடியும். இந்த மாபெரும் இந்து மத குருமார்கள் பாபர் மஜீத்தை தரைமட்டமாக்குபவரைப் பற்றியோ அங்கு ராமர்கோயில் கட்டுவதைப் பற்றியோ தங்கள் கனவில்கூட நினைத்துப்பார்த்திருக்க மாட்டார்கள். மாறாக, பல்வேறு மதங்களைத் தழுவுபவர்களுக்கிடையேயான சகோதரத்துவ உணர்வைத்தான் தங்கள் வாழ்நாள் முழுதும் போதித்தார்கள். கோத்ரா ரயிலெரிப்பிற்குப் பின் நடந்த பல நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லீம் ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் படுகொலையின் சூத்திரதாரியான, குஜராத் முதல்வர் என்றமுறையில் ராஜதர்மத்தை கடைபிடிக்க தவறியதால் அப்போதைய பிரதமர் திரு அடல்பிஹாரி வாஜ்பாயின் கண்டனத்திற்குள்ளானார். அத்தகைய ரத்தக்கறை படிந்த நரேந்திரமோடி நாட்டின் பிரதமர் வேட்பாளராக பிஜேபியால் முன்னிறுத்தப்படுகிறார். காங்கிரஸ் தலைமையிலான மத்திய யுபிஏ அரசாங்கத்தின் தவறான ஆட்சிக்கெதிரான மக்களின் கடும்கோபத்தை சாதகமாக்கிக்கொண்டு வகுப்புவாத அடிப்படையில் மக்களை துருவப்படுத்துவதன்மூலம் இந்து வாக்குவங்கிளை உருவாக்கும் நயவஞ்சகத் திட்டத்துடன் இந்த வகுப்புவாதத் தலைவரை பிஜேபியானது முன்னிறுத்திவருகிறது. குஜராத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளை அப்புறப்படுத்தி வளமான நிலங்களைப் பறித்து மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு தாரைவார்த்து, அவர்களுக்கு அங்கு தண்ணீரையும் மின்சாரத்தையும் மலிவு விலையில் வழங்கி, ஏராளமான மானியங்களை வழங்கி, தொழிலாளர் போராட்டங்கள் எதுவும் நடைபெறாததை உறுதிசெய்தார். அதன் காரணமாக அக்குழுமங்கள் பல்லாயிரம் கோடி ரூபாய்களை செலவுசெய்து அடுத்த பிரதமராக மோடியை முன்னிறுத்திப் பிரச்சாரம் செய்கின்றன.

'மதசார்பற்ற கூட்டணி' என சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகளால் போற்றப்படுகின்ற பிற பிராந்திய (மாநில) கட்சிகள் 'வாக்குவங்கியை உருவாக்கும் பொருட்டு பிராந்தியவாத மற்றும் இனவாத உணர்வுகளைத்தூண்டிவிட்டு மிகவெளிப்படையாகவே ஜாதி, பிரிவினைவாதம், பிராந்தியவாத அரசியலை நடத்திவருகின்றன. ஒன்றுபட்ட சிபிஐயானது **1964**ல் சிபிஐ(எம்) மற்றும் சிபிஐ என இரண்டாக உடைந்து, பின் சிபிஐ(எம்)மிலிருந்து பிரிந்து பலகுழுக்களாக சிதறுண்ட சிபிஐ (எம்எல்) ஆகிய இவையாவும் ஒரு உண்மையான மார்க்சிஸ்ட் கட்சியாக ஒரு போதும் இருந்ததில்லை. **60**களின் மத்திவரை தங்களுடைய சீர்த்திருத்த கண்ணோட்டத்துடன்கூடிய சில வெகுஜன இயக்கங்களை நடத்தியது உண்மையாயினும் நீண்ட நாட்களாக அரசாங்க பதவியை சுவைத்தபின் பாராளுமன்ற அரசியல் மற்றும் சலுகைகளுக்கு மிகமோசமாக அடிமையாகிவிட்டன. பரந்துபட்ட சுரண்டப்படும் துன்பப்படும் மக்கள் போராட்ட இயக்கங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும்போதும் இக்கட்சிகள் போராட்டக்களத்தை கைவிட்டு வெகுநாட்களாகிவிட்டன. அவர்களது முழு செயல்பாடும் பாராளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் சில கேள்விகளை எழுப்புவது, சில அறிக்கைகளை விடுவதிலேயே முடங்கிவிட்டன.

# சுரண்டும் பூர்ஷ்வாக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒருபுறம் சுரண்டப்படும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) மறுபுறம்

அதுமட்டுமல்ல, மேற்குவங்கம், கேரளத்தில் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஏகபோக குழுமங்கள், உள்நாட்டு வெளிநாட்டு பெரும் தொழிலதிபர்களின் மனங்குளிர தொழிலாளர்கள், விவசாயிகளது போராட்டங்களையும் பிற ஜனநாயக இயக்கங் களையும் கொடூரமாக நசுக்கவும் தயங்கியதே இல்லை. பல்வேறு தருணங்களில் இந்த அல்லது அந்த காரணங்களைக்கூறி மக்கள் கண்களில் மண்ணைத் தூவி காங்கிரஸுடனும் சில சமயம் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள பிஜேபியுடன்கூட கை கோர்த்து அதிகாரமாடத்தில் வலம் வருகின்றனர். சில தேர்தல் ஆதாயங்களைப் பெறவும் தற்போது நெருக்கடியிலிருந்து மீள காங்கிரஸிற்கு உதவும் பொருட்டும் பிராந்திய கட்சிகளை ஒன்று திரட்டுவதுமே அவர்களது தற்போதைய முழு முயற்சியாகும். ஒரு சமூக ஜனநாயக்கட்சி என்ற வகையில் கம்யூனிஸ்ட் என்றழைக்கப்படும் இவ் விரண்டு கட்சிகளும் பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சி (BLP)யைப் போல் முழுக்க முழுக்க அரசியலமைப்பு சார்ந்த பாராளுமன்ற கட்சியாக சந்தேகத்திற்கிடமின்றி சீரழிந்துவிட்டன. இதன் விளைவாக ஜனநாயக வெகுஜன போராட்டக் களத்தில் ஒரு வெற்றிடம் உருவாக்கப்பட்டுவிட்டது. சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கம் இல்லாததன் காரணமாக ஜனநாயக எண்ணங்கொண்ட அறிவு ஜீவிகளின் ஒரு பகுதியினர் (நமது ஆய்வின்படி ஆம் ஆத்மி கட்சியும் ஒரு பூர்ஷ்வா கட்சியேயாகும்) ஆம் ஆத்மி கட்சியில் இணைந்து வருகின்றனர். சமீபத்தில் சிஐஐ (CII)யால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் தன்னுடைய இந்த நிலையை ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் திரு கெஜ்ரிவால் மிக தெளிவாக கூறிவிட்டார். அந்த கூட்டத்தில் தன்னுடைய கட்சி முதலாளித்துவத்திற்கு எதிரான தல்ல என்றும் தனியார்மயத்தின் செயற்போக்கில் தான் திடமான நம்பிக்கை வைத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த இருண்ட சூழ்நிலையில் நாட்டின் அரசியல் வானமானது பாசிசம் எனும் கருமேகங்களால் சூழப்பட்டுவரும்போது இந்த காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய பாட்டாளி வர்க்கத்தின் ஒரே புரட்சிகரக் கட்சியான சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) மட்டுமே சுரண்டப்படும் மக்களின் ஒரே நம்பிக்கையாகத் திகழ்கிறது. அதன் ஆரம்பம் முதலே மார்க்சிசம்–லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை எனும் ஆயுதம்தரித்து மத்திய, மாநில அரசாங்கங்களின் மக்கள் விரோத கொள்கைகள், முதலாளித்துவ சுரண்டல் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கெதிராக நாடுதழுவிய உழைக்கும்வர்க்க போராட்டங்கள் மற்றும் ஜனநாயக வெகுஜன இயக்கங்களை நாடுமுழுவதும் கட்டி வருகிறது.

இந்த முதலாளித்துவ சுரண்டல் அமைப்பிலிருந்து தோன்றும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை வென்றெடுப்பதன் மூலம் மட்டுமே சாத்தியம் என எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உறுதியாக நம்புகிறது. சித்தாந்தரீதியாக, அரசியல்ரீதியாக, அமைப்பு ரீதியாக மட்டுமல்லாது கலாச்சாரரீதியாகவும்

# முதலாளித்துவ சுரண்டலை அனுமதிக்கப் போகிறோமா அல்லது விடுதலைக்கான போராட்டத்தை வலுப்படுத்தப்போகிறோமா என்பதை மக்கள் முடிவுசெய்ய வேண்டும்

உழைக்கும் வர்க்கத்தை தயார்செய்ய உயர்ந்த கலாச்சார, நீதிநெறி, தார்மீகத்தின் அடிப் படையில் வர்க்க போராட்டங்கள் மற்றும் ஜனநாயக வெகு ஜன போராட்டங்கள் வளர்த்தெடுக்கவேண்டியது தற்போதைய அவசரத் தேவையாகும். ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற வெகுஜன இயக்கங்கள் வளர்த் தெடுப்பதை மையமாகவைத்து இளைய தலைமுறையினருக்கு கல்வியூட்டவும் அவர் களை உத்வேகமூட்டவும் இந்திய மறுமலர்ச்சி மற்றும் விடுதலை இயக்கத்தில் புரட்சிகர போராளிகளின் பிறந்ததினம், நினைவு தினங்களை கட்சி அனுஷ்டித்துவருகிறது.

தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் புரட்சிக்கு தயாராகாத வரையிலும் பாராளுமன்ற மாயையில் சிக்கி உழலும் வரையிலும் பாராளுமன்ற மாயையை உடைத்து அதேசமயம் பூர்ஷ்வா மற்றும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தவும் வெகுஜனங் களின் அரசியல் விழிப்புணர்வை உயர்த்தும் நோக்கத்துடன் தேர்தல்களில் பங்கெடுக்க வேண்டியது அவசியம் என எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கருதுகிறது. தேர்தலில் போட்டியிடுவதற்கான மற்றொரு காரணம் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் பாராளுமன்றத்திற்கு வெளியே நடக்கும் போராட்டத்தை ஒருங் கிணைத்து வலுப்படுத்தி மக்களின் போராட்டக்குரலை பாராளுமன்றத் திற்குள் ஒலிக்கச்செய்வதாகும்.

எனவே, இந்தப் பாராளுமன்ற தேர்தலில் பல்வேறுபட்ட கொடிகளின்கீழ் பல்வேறு கட்சிகள் போட்டியிடும்போதும் உண்மையில் இரண்டு சக்திகள் இரண்டுவகை அரசியல் மட்டுமே இருக் கின்றன. ஒருபுறமும் சுரண்டும் பூர்ஷ்வா வர்க்கத்தை பிரதிநிதித் துவப்படுத்தி காங்கிரஸ், பிஜேபி கட்சிகளும் அதிமுக, திமுக, பிராந்திய கட்சிகளும் போலி கம்யூனிஸ்ட்டுகளான சிபிஐ(எம்), சிபிஐ, கட்சிகளும் மறுபுறம் சுரண்டும் வர்க்கம் மற்றும் பரந்துபட்ட துன்பப்படும் வெகுஜனங் களைப் பிரதிநிதித்துவப்படுத்தி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியும் இருக்கின்றன. பூர்ஷுவாக் கட்சிகளின் அரசியல் முதலாளி வர்க்கத்துக்கும் இவ்வமைப்புக்கும் சேவை செய்து மேலும் பேரழிவிற்குள் இந்நாட்டைக் கொண்டு செல்லும் அரசியலாகும். ஆனால் வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை அணிதிரட்டியும் கிராமம் முதல் நகரம் வரை, வயல்வெளியிலிருந்து தொழிற்சாலை வரை தங்கள் சொந்த மக்கள் கமிட்டிகளை அமைத்துக்கொள்வதன்மூலம் இறுதியில் மக்களின் அரசியல் அதிகாரத்தை வென் றெடுப்பது எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் அரசியலாகும்.

வருகின்ற பாராளுமன்றத் தேர்தல்களில் மக்கள் வாழ்வின் எதிர்காலத்தை நிர்ண யிக்கக்கூடிய விஷயங்கள் இவைதானாகும். முதலாளித்துவ சுரண்டலை அனுமதிக்கப் போகிறோமா அல்லது விடுதலைக்கான போராட்டத்தை வலுப்படுத்தப்போகிறோமா என்பதை மக்கள் முடிவுசெய்ய வேண்டும்.

வாழ்த்துக்களுடன்
பிரவாஸ் கோஷ்
பொதுச் செயலாளர்
எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்)

# பாராளுமன்றத் தேர்தல் 2014

## தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் நடைமுறையில் உள்ள கொள்கைகளும் அதன் விளைவுகளும் மக்கள் தற்போது சந்தித்துவரும் வாழ்க்கைச் சூழ்நிலைமையும்

நடைபெறும் இந்தப் 16வது மக்களவைத் தேர்தலை, தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரும் எதாவது மாற்றத்தைக் கொண்டுவருமா என்று ஏக்கத்துடனும் எதிர்ப்பார்ப்புகளுடனும் மக்கள் சந்திக்கின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களுக்குள் கூட்டணி பேரம், ஒருவரை ஒருவர் வசைபாடல், ஆட்பலத்தை காட்டும் மாநாடுகள், கவர்ச்சிகர வாக்குறுதிகள் கொண்ட தேர்தல் அறிக்கைகள் என வழக்கமான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டன. காங்கிரஸும் பாஜகவும் எதிர் எதிராக போட்டியிடுகின்றன. இவர்களை ஆதரித்து இவர்களுடன் கூட்டணியில் மாறிமாறி இடம்பெற்றுவரும் பல்வேறு மாநிலக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை அமைத்துக் கொண்டு களத்தில் நிற்கின்றன. ஊடகங்களும் இக்கட்சிகளையே மக்கள் முன்பு இருக்கும் மாற்றுகளாகக் காட்டுகின்றன.

ஆனால், இன்று நாம் சந்திக்கும் மோசமான சமூகப் பொருளாதார அரசியல் கலாச்சாரச் சூழ்நிலைமைகளுக்கு, நாடுமுழுமையும் இக்கட்சிகள் நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கும் கொள்கைகளே காரணமாகும். இவற்றைப் புரிந்து கொள்ள நமது மாநிலத்தில் நடைமுறையிலுள்ள கொள்கைகளே நல்ல உதாரணமாகும். எனவே, இதற்கு உதவும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் நடைமுறையில் உள்ள கொள்கைகளையும் அதன் விளைவுகளையும் மக்கள் தற்போது சந்தித்துவரும் வாழ்க்கைச் சூழ்நிலைமையையும் சுருக்கமாக உங்கள் முன் வைக்கின்றோம்.

## வேலைவாய்ப்பில்லா வளர்ச்சியை (Jobless growth) நோக்கி தமிழகத் தொழில்துறை

முந்தைய திமுக அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளால் விளைந்த அதிருப்தியும் கோபமும் அஇஅதிமுகவை ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியது. ஆட்சிக்கு வந்த 10வது மாதத்தில் அஇஅதிமுக அரசாங்கம் 15 லட்சம் கோடி முதலீட்டை உள்ளடக்கிய 'விஷன் 2023' என்ற லட்சிய நோக்கு அறிக்கையை வெளியிட்டது. இந்தியா விலேயே அதிக முதலீட்டை ஈர்க்கும் மாநில மாகத் தமிழகத்தை மாற்றப் போவதாகவும் 10 ஆண்டுகளில் வறுமையை முற்றிலும் ஒழித்து தனிநபர் ஆண்டு வருமானத்தை 4.5 இலட்சமாக உயர்த்துவோம் என்றும் முதல்வர் செல்வி ஜெயலலிதா பறைசாற்றினார்.

எப்படி இது நிறைவேறுமாம்? 4 வழி சாலைகளை 6வழி நெடுஞ்சாலைகளாக விரிவாக்குதல், மூன்று பெரிய துறை முகங்கள், மாபெரும் குளிர்சாதன குடோன்கள் உட்பட விவசாய விளை பொருட்களின் சேமிப்பு அறைகள் ஆகிய வற்றை கட்டுதல், பெரிய தோட்டக்கலை பூங்காக்கள் மற்றும் விவசாய விளைபொருள் பதன மண்டலங்கள் (agro processing zones) மற்றும் பெரிய பாசன நீர்நிலைகள் அமைத்தல், என மாநிலத்தில் உட்கட்டுமான வளர்ச்சியை (Infrastructure Development) ஏற்படுத்துவதன் வாயிலாகவாம். மிகப்பெரிய அளவில் அரசுத்துறை–தனியார் கூட்டுப் பங்கெடுப்பின் (Public Private Partnership-PPP) மூலம் இது சாதிக்கப்படுமாம். மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக சுமார் 25,000 ஏக்கரில் நிலவங்கி உருவாக்கி முதலீட்டாளர்களுக்குத் தரப்படும். மெட்ரோ ரயில் திட்டங்கள் போன்ற நகர்ப்புற கட்டு மானங்கள், அயல்நாட்டு நோயாளிகளை ஈர்க்கும் 10 சூப்பர் ஸ்பெஷாலிடி மருத்துவ மனைகள் என இன்னபிற திட்டங்களும் இந்த அறிக்கையில் உள்ளன.

புள்ளிவிவரங்கள் தருவதல்ல எமது நோக்கம். இவற்றால் யதார்த்தத்தில் பலன் என்ன என்பதைச் சுட்டிக்காட்டுவதே எமது நோக்கம். மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்ட நெடுஞ்சாலைகளும் துறைமுகங்களும் குடோன்களும் இதுவரை தனியார் நுழைவுக் கட்டணம் (டோல் போன்றவைகள்) வசூலிக்கவே பயன்பட்டன. சாதாரண தனியார் மருத்துவமனையிலேயே சிசேரியன் பிரசவத்திற்கு ஒரு இலட்சத்திற்கு மேல் பணம் பறிக்கப்படும்போது சூப்பர் ஸ்பெஷாலிடி மருத்துவமனைக்குள் நுழையும் பொருளாதாரத் தகுதி சாமானிய மக்களுக்கு எப்படி வரும், இதை அறிந்தே 'வெளிநாட்டு நோயாளிகளை ஈர்க்கும் மருத்துவ சுற்றுலா' வை ஊக்குவிக்க இத்தகைய மருத்துவ மனைகள் கட்டப்படுகின்றனவாம். சரி, புதிய மருத்துவமனைகள் மக்களுக்கு நல்ல வேலை கொடுக்குமே எனக் கேட்கலாம். அப்போலோ போன்ற கொழுத்த இலாபமீட்டும் இத்தகைய மருத்துவ மனைகளில் வெறும் ரூ 10,000 மாத ஊதியம் கேட்டுப் பெற செவிலியர் சகோதரிகள் பட்ட பாட்டைத்தான் நாம் நன்றாக கண்ணுற்றோமே.




மக்கள் கோரிக்கைகளுக்காக பாராளுமன்றம் நோக்கிய பேரணியின் ஒரு பகுதி

அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்க்கும் கொள்கையை திமுக அரசாங்கமும் எடுத்தது. 1996இல் ஃபோர்டு வாகனத் தொழிற்சாலை மறைமலை நகரிலும் ஹுன்டாய் நிறுவனம் 550 ஏக்கரில் ஸ்ரீபெரும்புதூரிலும் அமைக்கப் பட்டது. தற்போது 6 மிகப்பெரிய பன்னாட்டு வாகன நிறுவனங்கள் வந்துவிட்டன. சென்னையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் நோக்கியா, சாம்சங், ஃப்லெக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற உற்பத்தி நிறுவனங்களும், டிசிஎஸ், விப்ரோ இன்ஃபோசிஸ் போன்ற இந்திய பன்னாட்டு ஐடி நிறுவனங்களும் ஏராளமாக சலுகை பெற்று, 24மணி நேர இலவச மின்சாரமும் பெற்று இயங்குகின்றன.

இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்தி உருவாக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் இயங்கும் நிறுவனங்கள் இதுவரை மொத்தத்தில் சுமார் இரண்டு இலட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பை அளித்துள்ளன. ஆனால் திருப்பூரில் மட்டும் கடந்த சில ஆண்டுகளாக 5 இலட்சம்பேர் வேலை பார்க்கும் பனியன் தொழிற்சாலை களில் பெரும்பகுதியினர் வேலை இழந் துள்ளனர். தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எனப் பெருமையுடன் அழைக்கப்பட்ட கோவை தற்போது இருளில் மூழ்கியிருக்கிறது. இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்த ஓசூர், இராணிப் பேட்டை, திருவெறும்பூர் தொழில் நகரங் களும் கிண்டி அம்பத்தூர் போன்ற தொழிற்பேட்டைகளும் ஒடுங்கிவிட்டன.

அந்நிய நேரடி முதலீட்டுத் (FDI) திட்டங்கள் எல்லாம் பல இலட்சம்பேர் வேலையிழக்க சில ஆயிரம்பேருக்கு மட்டும் வேலை கொடுக்கும் திட்டங்களே என உலகம் முழுதும் மக்கள் விமர்சித்துவரும் வேளையில் திமுக, அஇஅதிமுக ஆகிய அரசாங்கங்கள் அவற்றையே தொடர்ந்து நடைமுறைப் படுத்துகின்றன. ஒருதலைப்பட்சமான இந்த நகர்ப்புறச்சார்பு வளர்ச்சி மாநிலம் முழுவ தையும் பின்தங்க வைத்துவிட்டது.

## வேதனைதரும் வேலையின்மைப் பிரச்சினை

மாநிலத்தில் வேலைவாய்ப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து மாநிலத்தில் 90 இலட்சத்திற்கும்மேல் படித்த இளைஞர்கள் காத்துக்கிடக்கின்றனர். அமைப்புரீதியான தொழில்களில் பணிபுரியும் மொத்தம் 24.2 இலட்சம் தொழிலாளிகளில் 14 இலட்சம்பேர் (அதாவது 60%) அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்களாக இருக்கின்றனர். தனியார்துறை அப்படி ஒன்றும் வேலைவாய்ப்புகளை வாரி வழங்கி விடவில்லை. 2011 ஆம் ஆண்டில் இந்த மொத்தத் தொழிலாளர் எண்ணிக் கையும் 1.6% குறைந்துவிட்டது. தேசிய அளவில் வேலையின்மை வளர்ச்சி விகிதம் 2.7% என்றால் மாநிலத்தில் அது 3.5% ஆகவும் நகரத்தில் 8.2% ஆகவும் விளங்குகிறது. முறைசாராத் தொழில்களில் பிழைப்பு நடத்தும் குடும்பங்களே இன்று அதிகம். ஐ டி துறையில் கிடைக்கும் சில ஆயிரம் வேலை வாய்ப்பிற்காக இலட்சக் கணக்கானோர் பொறியியல் படிப்பைப் படித்துமுடித்து விட்டு காத்திருக்கின்றனர். ஒருநேரத்தில்



வேலையின்மைக்கெதிராக அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம்–சென்னையில்

ஆயத்த ஆடை உற்பத்தித்துறையில் தங்கள் திறனை வளர்த்துக்கொண்ட இலட்சக்கணக் கானவர்களுக்கு இன்று வேலையில்லை. விவசாயத்தைவிட்டு கட்டிடத் தொழிலாளர் களாக மாறிவிட்டவர்களுக்கு அத்தொழிலில் ஏற்பட்டுள்ள சுணக்கம் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

## தகுதியற்றவர் என முத்திரைகுத்த தகுதித் தேர்வுகள்!

இருக்கும் சில ஆயிரம் ஆசிரியர் பணி களாவது கிடைக்கும் என ஆசிரியர் நுழைவுத்தேர்வுகளை எழுதி பயிற்சி நிலையங்களில் படித்து BEd, B.El.Ed, BSc.Ed D.El.Ed என பல பட்டங்களை வாங்கி தங்கள் தகுதியை வளர்த்துக்கொண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து வருடக்கணக்கில் இவர்கள் காத்துக் கிடக் கின்றனர். சீனியாரிடிப்படி தனது முறை வந்துவிட்டது என சிலர் மகிழ்ச்சி அடையும் வேளையில் வந்தது TET என்ற ஆசிரியர் தகுதித் தேர்வு! ஆனால் இது தகுதிச் சான்றிதழ் மட்டுமே அன்றி வேலைக்கான உத்திரவாதமல்ல.



கல்வி தனியார்மயத்திற்கெதிராக அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம்–மதுரையில்

பின் ஏன் இந்தத் தேர்வு? தகுதிபடைத்த இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வழங்கும் பொறுப்பை அரசாங்கம் தட்டிக் கழித்து பழியை அவர்கள்மேல் போடவே வினாத்தாள்களை கடுமையாக்கி இத்தேர்வு நடத்தும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கம் இத்தேர்வை நடத்த வலியுறுத்திய போதிலும், மத்திய அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் அஇஅதிமுக அரசாங்கம் ஏன் இதை எதிர்க்கவில்லை?

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பல வருடங்களாக மூப்புப் பட்டியலில் முதல் வரிசையில் வந்தவர்கள் பரமபத விளை யாட்டில் பாம்பு கடித்து சரிந்ததுபோல் வீழ்ந்துவிட்டனர். அல்ல அல்ல! பட்டியலி லிருந்தே நீக்கப்பட்டுவிட்டனர். எவ்வளவு வேதனை! மன உளைச்சல்! தேர்வுக்கான பயிற்சிமையச் செலவு வழிகாட்டிப் புத்தகங்கள், ரூ **500** விண்ணப்பக் கட்டணம் மற்றும் பயணச் செலவுகள் என பணமும் நேரமும் எவ்வளவு விரயம்! தேசிய கல்வி மற்றும் ஆராய்ச்சி கவுன்சில் வகுத்துக் கொடுத்த அரசாங்கக் கல்வித்திட்டத்தில் பள்ளிகளில் படித்துத்தேறி, அங்கீகரிக்கப் பட்ட கல்லூரிகளில் பட்டம் பெற்று, மத்திய ஆசிரியர் கல்விவாரிய அங்கீகாரம்பெற்ற ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்று உருவானவர் களில் **90%** பேருக்கு ஒரு தேர்வின் மூலம் தகுதி இல்லை என கூறினால் குற்றம் **90** சதவீதத்தினர் மீதா அல்லது அவர்கள் கற்ற கல்வியின் மீதா, அல்லது அக்கல்வியை வழங்கிய அரசாங் கத்தின்மீதா?

## செவிலியர் (நர்ஸ்) பணிக்கும் தகுதித் தேர்வு!

ஆசிரியர் தேர்வாணையம் (TRB) ஆசிரியர் தகுதி தேர்வு TET ஐ நடத்துவதைப் போன்றே மருத்துவ தேர்வாணையம் (MRB) செவிலியர் பணி அமர்த்துதலிலும் தகுதித் தேர்வை அறிமுகப்படுத்தி செவிலியர் பயிற்சி பெற்றுவரும் மாணவ மாணவிகளையும் குழப்பி கவலையுறச் செய்துவிட்டது. **2012**இல் இருந்தே மாணவர்கள் இத்தேர்வு முறையை

ரத்துசெய்யவேண்டும் என்று கோரியும் மாநில அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. பணி நியமன விதிமுறையை திடீரென மாற்றியதால் பணி ஆணைக்காக காத்திருந்த செவிலியர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். நீதிகேட்டு உயர்நீதிமன்றத்திற்கு சென்றார்கள். நீதிமன்றமும் கைவிட்டதால் தற்கொலை முயற்சியில் நீதிமன்ற கட்டிட உச்சிக்கு இவர்கள் சென்றுவிட்டனர். வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீவிரத்தை உணர்த்த இதைவிட நெஞ்சை உருக்கும் சம்பவம் வேண்டுமோ.

TET, MRB மற்றும் வழக்குரைஞராக பதிவுசெய்ய BCI தகுதித் தேர்வு போன்ற தேர்வுகளைக் கைவிடவேண்டும், நியமன விதிமுறைகளை போதிய காலஅவகாசமின்றி அடிக்கடி மாற்றக்கூடாது என்ற கோரிக்கைகளை மாநிலத்தில் மட்டுமல்ல நாடுமுழுவதும் எழுப்பிப் போராட வேண்டியது அவசியமாகும்.

## வியாபாரமாகிவரும் கல்வி

கேடில் விழுச் செல்வம் கல்வி–அதாவது கல்வியே அழியாத செல்வம் என்றார் திருவள்ளுவர். ஆனால் வீடு நிலம் நகை என அனைத்துச் செல்வங்களையும் விற்றால்தான் கல்வி என்ற நிலைக்கு கல்வி முற்றிலும் வியாபாரமயமாகிவிட்டது. அரசாங்கப் பள்ளிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து மாநிலத்தின் ***60%*** க்கு மேல் மாணவர்கள் தனியார் பள்ளிகளுக்கு ஓடும் நிர்ப்பந்தம் நிலவுகின்றது. ***2009***இல் ***43%*** ஆக இருந்த அரசுப் பள்ளியில் சேரும் மாணவர் எண்ணிக்கை ***2013***இல் ***36%*** ஆக குறைந்து விட்டது. இலவசப் புத்தகங்கள், மிதிவண்டி, மடிக்கணிணி ,சீருடை, புத்தகப்பை, காலணி, கலர்பென்சில், அட்லஸ், ஜியோமெட்ரிபாக்ஸ் என இலவசமாக எத்தனை கொடுத்து என்ன பயன்?




ஆபாச சினிமா, மது, போதைப்பொருட்கள் பரவலை எதிர்த்து – மதுரையில்

அடிப்படையில் தரமான கல்வியும் போதிய ஆசிரியர்களும் உட்கட்டுமானமும் ஏன் கழிப்பிடவசதிகூட இல்லாதநிலை நிலவினால் யார்தான் இப்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பார்கள். பாத்திரம் கழுவியேனும் தன் பிள்ளைகளை முறையாகப் படிக்கவைக்கவேண்டும் என்று நினைத்து தனியார் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்களை ‘ஆங்கில மோகத்தால் அப்படிச் செய்கிறார்கள்’ என தவறாக மதிப்பிட்டுவிட்டது அஇஅதிமுக அரசாங்கம்! எனவே கிராமப்புற அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வியை திடீரென அறிவித்தது. தாய்மொழிவழிக் கல்வியுடன் ஆங்கில மொழிப் பாடத்தை தரமாகக் கற்பித்தாலே அறிவும் மொழியும் மாணவர்களிடம் வளம்பெறும். ஆனால் அரசுப் பள்ளிகளில் ‘தடையில்லா தேர்ச்சி முறை’ கொள்கையின்படி பரீட்சையில் பாஸாகாமல் பள்ளி இறுதிவரை செல்ல முடியும் என்பதால் பெரும்பாலான மாணவர்கள் இன்று தமிழும் தெரியாமல் ஆங்கிலமும் தெரியாமல் பள்ளிச் சான்றிதழுடன் வெளியேறுவது வேதனையளிக்கிறது. மேலே குறிப்பிட்டவை யெல்லாம் ஏதோ தற்செயலாக நடப்பவையல்ல. இவையெல்லாம் ***1986***இல் மத்தியில் காங்கிரஸ்ஆட்சி புகுத்திய புதிய கல்விக்கொள்கை (NPE-86) அடிப்படையில் கடந்த ***30*** ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படும் கல்வி தனியார்மய

வியாபாரமய திட்டங்களின் விளைவு களாகும்.

*1985* ஆண்டில் *1685* ஆக இருந்த அரசு உயர்நிலைப் பள்ளிகள் *2000* ஆண்டில் *2000*ஆக மட்டுமே உயர்ந்தன. ஆனால் அரசு உதவிபெறா உயர்நிலைப் பள்ளிகள் *5* லிருந்து *104* ஆகவும் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் *144* இருந்து *1641*ஆகவும், தவிர, எண்ணற்ற நர்சரிப் பள்ளிகளும் முளைத்தன. கலை அறிவியல் கல்லூரிகளில் அரசுக் கல்லூரிகள் *64*, அரசு உதவிபெறும் கல்லூரிகள் *160* என மொத்தம் *224*தான். ஆனால் தனியார் சுயநிதிக் கல்லூரிகளோ *446*. அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் *14*, ஆனால் சுயநிதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் *651*. மொத்தத்தில் இன்று கல்வித் துறையில் தனியார் ஆட்சியே கோலோச்சுகிறது.

அனைத்திற்கும் மேலாக கல்வியின் உள்ளடக்கம் திட்டமிட்டு சிதைக்கப்பட்டு வருகின்றது. உலகவங்கியின் கட்டளைப்படி மத்திய அரசாங்கம் பள்ளிக்கல்விக்கான




பெண்கள்மீது பாலியல் குற்றங்களுக்கு எதிராக அகில இந்திய மாநாட்டில் பங்கேற்பு

தேசிய பாடத்திட்ட வரையறை NCFSE *2005* வகுத்தது. அதன் அடிப்படையில் முப்பருவப் பாடம், தொடர் முழுமதிப்பீடு, மதிப் பெண்ணிற்கு மாறாக கிரேடுமுறை தவறான கற்றல்–கற்பித்தல் முறைகொண்ட சமச்சீர் கல்வித் திட்டத்தை திமுக அரசாங்கம் *2010*இல் அறிமுகப் படுத்தியது. அஇஅதிமுக, ஆட்சிக்கு வந்தவுடன் ரூ*200*கோடி செலவு செய்து அச்சடித்த சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களை முழுமையாக தூக்கிப்போட்டு விட்டு, மாதக்கணக்கில் காலம் தாழ்த்தி உள்ளடக்கத்தில் மாற்றம் பெரிதுமின்றி புதிதாக புத்தகங்களைப் போட்டது. இறுதியில் தாங்கள் சமச்சீர் கல்வித்திட்டத்திற்கு எதிரான வர்கள் அல்ல என அஇஅதிமுக அரசாங் கமும் நீதிமன்றத்தில் கூறிவிட்டது. ஆனால் சமச்சீர்கல்வி ஏற்றத்தாழ்வை அகற்றி சமத்தன்மையையோ, சீர்படுத்தலையோ கொண்டுவரவில்லை.

## கவலைதரும் கலாச்சாரச்சூழல்

அறிவியல், கலை, இலக்கியம், மொழி, தத்துவம் என முழுமைபெற்ற மனிதனை உருவாக்கும் அறிவையும் சமூக அக்கறை யையும் வளர்க்காமல் வேலைக்காகத் தயார் செய்யப்பட்ட ரோபோட்டுகளைப்போல் தொழிற்கல்வி மட்டும் கற்றுக்கொண்டு இளைஞர்கள் வெளி வருகின்றார்கள். இந்த இளைய தலைமுறையினர் சந்திக்கும் கலாச் சார சூழல் என்னவாக இருக்கிறது? பெருக் கெடுத்தோடும் சாராயம், கொலைகளும் ஆபாசங்களும் நிறைந்த வக்கிர உணர்வைத் தூண்டும் திரைப்படங்கள், மனித மென் னுணர்வுகளைச் சிதைத்து குடும்ப உறுப் பினர்களே ஒருவரை ஒருவர் பழிவாங்கும் கதையமைப்புகள் கொண்ட டிவிசீரியல்கள், பாலியல் ஆபாசங்கள்நிறைந்த இன்டெர்நெட் ஊடகங்கள் என நாட்டின் கலாச்சாரம் படு மோசமாகி வருகின்றது. பல டிவி சேனல் களில் பாலியல் தொடர்பான பின்னிரவு நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக ஒலிபரப்பப் படுகின்றன. அரசாங்கமும் தணிக்கை வாரியமும் கண்டும் காணாமல் இருக்கின்றன.

பாலியல் வன்கொடுமைகள் முன்னிலும் அதிகமாக தற்போது நடக்கின்றன. படித்து, சாஃப்டுவேர் நிறுவனத்தில் பணிபுரிந்து புதுமைப்பெண்ணாக துணிச்சலுடன் வெளிவரும் பெண்களுக்கே நகரத்தில்

உயிருக்கும் மானத்திற்கும் உத்திரவாதமில்லை. பெண்பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் நன்றாக உறங்கி வெகுநாட்களாகிவிட்டன. மாநிலத்தில் எது கிடைக்கவில்லையென்றாலும் மது கிடைக்கின்றது. ஆண்டுதோறும் மதுக்கடைகளின் வருமானத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப் படுகின்றது. மது நாட்டிற்கும் வீட்டிற்கும் உயிருக்கும் கேடு என்று எழுதிப் போட்டுவிட்டு அரசாங்கமே இந்த கேடுகெட்ட செயலை செய்கின்றது. பண்டிகை நாட்களில் விற்பனைவசூலை சாதனையாக அறிவிக்கின்றனர் என்றால் ஆளுவோரின் கலாச்சாரத்தரத்தை என்னென்பது.

அனைத்துத்தரப்பு மக்களிடமும் அவர்களே அறியாவண்ணம் நுகர்வுக் கலாச்சாரம் என்ற புற்றுநோய் பரவிவருகின்றது. 0% வட்டியுடன் கடன், தவணைமுறைகள், ஒன்று வாங்கினால் இரண்டு இலவசம், ஆடித் தள்ளுபடி என கண்ணைப் பறிக்கும் விளம்பரங்களுடன் நுகர்வுப் பொருட்கள் சந்தையில் ஆக்ரோஷமாக விற்பனை செய்யப் படுகின்றன. தேவையற்ற பொருட்களையும் வாங்க வேண்டும், பயன்படாவிட்டாலும் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நுகர்வு மனப்பான்மை போதைக்கு மக்கள் ஆளாகின்றார்கள். இதனால் எப்பொழுதும் மனிதன் சுயநல சிந்தனையிலேயே மூழ்கி சமூக அரசியல் உணர்வற்றவனாக ஆகிறான்.

## பெருமைமிக்க மறுமலர்ச்சிகாலப் பாரம்பரியம் அழிக்கப்படுகின்றது

இந்திய நாடு செழுமைவாய்ந்த சுதந்திரப் போராட்ட பாரம்பரியத்தையும் மறுமலர்ச்சி கால கலாச்சாரத்தையும் கலைகளையும் இலக்கியத்தையும் கொண்டிருக்கிறது. ஜாதி, மத, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நின்ற குதிராம் போஸ், பிரீதிலதா, பகத்சிங், நேதாஜி, பாரதியார், வ.உ.சிதம்பரனார் போன்ற எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை, படைப்பாளிகளை படைத்த நாடு, நமது நாடு. ஆனால் திட்டமிட்டு இந்த கலாச்சாரம் அழிக்கப்படுகின்றது. பாடப் புத்தகங்களில் இவர்களின் பெயர்களைக்கூட பார்ப்பது அரிதாகிவருகின்றது. ‘உயர்ந்த கலாச் சாரத்தரத்தைக் கொண்டிருந்தால் பட்டினி கிடக்கும் ஒருநாடுகூட அநீதியை எதிர்த்துப்போராட எழுந்துநிற்க முடியும். ஆனல் அது தனது கலாச்சாரத்தை தார்மீக ஒழுக்கநெறியை இழந்துவிடும் போது, அனைத்தையும் இழந்து விடுகின்றது’ என்று இக்காலக் கட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளரும் எமது எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயளாலருமான தோழர் சிப்தாஸ் கோஷ் முன்பே குறிப்பிட்டுள்ளார். உயர்ந்த ஒழுக்க நீதிநெறிகளைப் பேணி வளர்த்தெடுக்கும் கடமையை இனி அரசாங்கம் செய்யாது.




கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு எதிரான போராட்டம்

மக்கள் கையில்தான் அப்பொறுப்பு இருக்கின்றது.

## மிரட்டும் மின்வெட்டு

தனியார்மயத்தைக் கொண்டுவரும் மின் சாரச்சட்டம்–2003 அமலாக்கப் பட்டதிலிருந்து அரசாங்கத்தின் மாநில மின்வாரியம் TNEB Ltd, மின்னுற்பத்தி மற்றும் வினியோகம் TANGEDCO, மின்பகிர்மானம் TANTRANSCO என மூன்றாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் தொழில்நுட்ப செயல்பாடுகள் தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. மின்சாரச்

சட்டம்–2003 இன்படி இனிமேல் மாநில மின்வாரியங்கள் மின்னுற்பத்தி செய்யக் கூடாது. இக் கொள்கையை திமுக தனது ஆட்சியில் கொண்டுவந்தது. இன்றும் இதே கொள்கை தொடர்கிறது. சுருங்கச் சொன்னால் மாநிலத்தில் நிலவும் கடும் மின் வெட்டிற்குக் காரணம் இக்கொள்கை தானாகும். மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்ப தாகக்கூறி தினந்தோறும் கடிதம் எழுதும் தமிழக முதல்வர் மின்சாரச் சட்டம்–2003ஐ எதிர்க்கவில்லை.

மின்துறையில் கட்டுப்பாடு நீக்கம் (De regulation) செய்யப்பட்டதால் தனியார் உற்பத்தியாளர்கள் விதிக்கும் கட்டளைகளுக்கு ஏற்ப கட்டணம் நிர்ணயிக்கப் படுகின்றது. ஏகபோக மின்உற்பத்தி கம்பெனிகள் கேட்கும் அநியாயவிலைக்கு மக்கள் வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது. வாங்கப்பட்ட மின்சாரமும் நகர்ப்புற சிறப்புப் பொருளாதார மண்டல கம்பெனிகளுக்கு மலிவுவிலையில் வழங்கப்படுகிறது. இடையே கட்டண உயர்வையும், வரிச்சுமையையும் தாங்கிக் கொண்டு மக்கள் இந்த உண்மை தெரியாமல் அறியாமை என்ற இருட்டிலும் உண்மையான இருட்டிலும் இருக்கின்றனர்.

இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இருக்கும் மின்சாரத்தை பகிர்ந்தளிக்க இவர்கள் எடுத்த நிர்வாக நடவடிக்கையையேயாகும். சென்னையில் மட்டும் இரண்டு மணி நேரம் பவர்கட். கிராமப்புறங்களில் 10 மணிநேரமும் அதற்குமேலும் பவர்கட். ஆனால் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம், ஆனால் பல இலட்சம் தொழிலாளிகள் பணியாற்றும் சிறு தொழில்களுக்கு பவர்கட். சென்னையில் குளுகுளு மால்கள் விளம்பரப் பலகைகள் ஜொளிக்கவேண்டும். ஆனால் மாநிலத்தின் பிறபகுதி மருத்துவ மனைகளுக்கும் பள்ளிகளுக்கும் படிக்கும் மாணவர்களுக்கும் பவர்கட். இந்தச் சூழ்நிலையிலும் ஜுலை 2013லிருந்து பவர்கட் இல்லை என்று முதல்வர் தைரியமாக அறிவித்தார்!

கூடங்குளம் முதல் அணுமின்நிலையம் செயல்பட்டால் மாநில மின்பிரச்சினை தீர்ந்துவிடும் என்பது போன்ற தோற்றம் உருவாக்கப்பட்டது. அணுமின் நிலையம் சுற்றுச் சூழலுக்கும் மனித உயிருக்கும் பாதுகாப்பற்றது என்ற அச்சஉணர்வு மக்களிடம் நிலவுகிறது. அப்பகுதி மக்களின் நியாயமான அச்ச உணர்வை மதித்து ஜனநாயக ரீதியில் பேசி தீர்ப்பதற்குப் பதிலாக போராடும் மக்கள் மீது மத்திய அரசாங்கம் மத்திய பாதுகாப்பு படையைக் கொண்டு மிரட்டியது. மாநில அஇஅதிமுக அரசாங்கம் துவக்கத்தில் மக்களுக்கு ஆதரவு தருவது போன்று காட்டிக் கொண்டு சங்கரன் கோவில் இடைத்தேர்தல் முடிந்தவுடன் 5000 பேர் கொண்ட காவல் படையை அனுப்பி மக்கள் மீது தாக்குதல் தொடுத்தது. போராடும் மக்கள்மீது தேச துரோகம் உட்பட நூற்றுக்கணக்கான வழக்குகளைப் பதிவுசெய்தது.

இது ஒருபுறம் இருக்கட்டும். முதல்கட்ட அணுமின் நிலையத்தில் உருவாகும் அதிக பட்ச 1000 மெகாவாட்டில் 50% மட்டுமே மாநிலத்திற்குக் கிடைக்கும். மாநிலத்திற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச 13,500 மெகா வாட்டில் வெறும் 8000 தான் சராசரியாகக் கிடைக்கின்றது. பற்றாக் குறையோ 5500 மெகாவாட். எனவே, ஆபத்துகள் நிறைந்த அணுஉலை மாநிலத்தின் தேவையை பூர்த்திசெய்யாது. மேலும், கடந்த நான்கு ஆண்டுகளாக எந்த உருப்படியான மின் உற்பத்தித் திட்டமும் முழுமை பெறவில்லை. மின்பற்றாக்குறையைக் காரணம்காட்டி இலாபநோக்கம் கொண்ட தனியார் மெகா மின்உற்பத்தித் திட்டங்கள் போடப்படுகின்றன. இவற்றிற்கு அரசாங்கமே மக்களின் எதிர்ப்பைமீறி நிலத்தை கையகப்படுத்தி, தனியாரிடம் ஒப்படைக்கிறது. மக்களின்

வாழ்வாதாரங்களாக இருக்கும் பாரம்பரிய விளைநிலங்களுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் இந்தத் திட்டங்களுக்கு மக்களின் ஒப்புதல் ஜனநாயக ரீதியில் பெறப்படுவதில்லை. மரக்காணத்திலும் செய்யூரிலும் கொண்டு வரவிருக்கும் திட்டம் இதற்கு நல்லதொரு உதாரணமாகும்..

## நெய்வேலி என் எல் சி பொதுத் துறை பங்குகள் விற்பனை

மக்களின் வரிப்பணத்தாலும் தொழிலாளர்களின் உழைப்பினாலும் உருவான நெய்வேலி பொதுத்துறையில் பங்குவிற்பனை கூடவே கூடாது என பொதுமக்களும் தொழிலாளர்களும் கடுமையாக எதிர்த்துப் போராடினர். பங்குவிற்பனையை எதிர்ப்பதாகக் கூறிய மாநில அரசாங்கம் இறுதியில் அதுவே ரூ.500 கோடிக்கு பங்குகளை வாங்கிக் கொண்டது. இதனை திமுகவும் ஆதரித்தது. ஆக, பொதுத் துறைகளில் முதலீட்டை படிப்படியாக விற்கும் மத்திய அரசாங்கத்தின் தனியார்மயக் கொள்கைக்கு இந்தக்கட்சிகள் எதிரானவர்கள் அல்ல என்பது தெளிவாகிறது.

## மாநிலக் கட்சிகளின் அரசாளும் பாங்கு (Governence)

திமுகவும் அஇஅதிமுகவும் மாறி மாறி ஆட்சிக்கு வரும்போது முன்னர் ஆட்சியில் எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகள் எடுத்து சாதனைபுரிவது வழக்கம். கடந்தமுறை அஇஅதிமுக அரசாங்கம் புதிய தலைமை செயலக விஸ்தரிப்புக்காக சேப்பாக்கில் இராணிமேரி பெண்கள் கல்லூரியை (QMC) இடிக்கத்துணிந்தது. மகளிருக்காக 1914இல் கட்டப்பட்ட சென்னையின் முதல் கல்லூரியும் இந்தியாவின் இரண்டாவது கல்லூரியுமான QMC பெண்விடுதலையின் வரலாற்றுச் சின்னமாகக் கருதப்படுகின்றது என்பதை குறிப்பிட வேண்டும்.. இதைத் தகர்ப்பதற்கு பலத்த எதிர்ப்பு எழுந்ததால் கோட்டூர்புரம் அண்ணா பல்கலைக்கழக பகுதியை அஇஅதிமுக அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. 2006இல் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் தலைமை செயலகத் திட்டத்தை மாற்றி அப்பகுதியில் அண்ணா நூற்றாண்டு நூலகம் கட்டப்பட்டது. பல்வேறு மாவட்ட நூலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒரேஇடத்தில் குவித்து இந்த நூலகம் கட்டப்பட்டது. அதேபோல் அண்ணா சாலையில் ஓமந்தூரார் வளாகத்தில் தலைமைச் செயலகக் கட்டிடம் கட்டப்பட்டது. 2011இல் அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் அதன் முதல்வர் அண்ணா நூலகத்தையும் புதிய செயலகக் கட்டிடத்தையும் திமுக ஆட்சியில் கட்டப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக அவற்றை மருத்துவமனைகளாக மாற்றுவேன் என்றார். திமுக வேலையில் அமர்த்திய 13,000 நலத்திட்டப் பணியாளர்களை ஒரு சொடுக்கில் நீக்கினார். அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டும் இதுநாள்வரை மாநிலஅரசு செய்யவில்லை. கிடைக்கும் சொற்ப வருவாயும் இழந்து 15 குடும்பங்கள் தற்கொலை செய்துகொண்டுவிட்டன. இன்று தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர்படை என்ற அமைப்பை உருவாக்கி 10000 பேருக்கு தற்காலிகப் பணி ஆணை வழங்கப்படுமாம். இவ்விரு கட்சிகளுக்கிடையில் சிக்கி ஏழை மக்கள் பந்தாடப்படுவது வேதனையாகும்.

நிர்வாகத்திலும் இவர்களின் ஆட்சிமை (governence) கவலையளிப்பதாகவே உள்ளது. திமுக ஆட்சியில் கட்சி நிர்வாகிகள் நிர்வாகத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டிருந்தார்கள். அஇஅதிமுக ஆட்சியிலோ முதல்வரின் கட்டளைக்கு அடிபணிந்து செயல்படும் அதிகாரிகளின் அதிகாரத்துவ ஆட்சி நடைபெற்றுவருகிறது. அமைச்சர்கள் கூட சுயேட்சையாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. இதனால் மாநில முழுவதிலும் மக்களின் பிரச்சினைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதில்லை.

மாநில மக்களிடமிருந்து வரும் புகார்களோ போராட்டக் கோரிக்கைகளோ ஆட்சியாளர் களின் காதில் விழுவதில்லை. மக்கள் மனுக்கள் அமைச்சர்களின் அல்லது செயலர் களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப் படாமல் கடைநிலை அதிகாரி களாலேயே அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விடுகின்றது. e-governece என்று கூறப்படும் கணிணி ஆட்சியை அறிமுகப்படுத்தி எளிதாக விண்ணப்பித்து பல்வேறு உரிமங்களை, சான்றிதழ்களை, அனுமதிகளை பட்டாக்களை பெற்றுக் கொள்ளலாம் புரோக்கர்கள் தேவை யில்லை ஊழல் அகற்றப்படும் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் இதற்கு மக்கள் வரிப்பணத்தை செலவளித்ததுதான் மிச்சம், ஊழலும் புரோக்கர்களும் ஒழிந்தபாடில்லை.

## தனியார் இன்சூரன்ஸ் திட்டத்தில் மக்களை மூழ்கடிக்க முயற்சி

மத்திய அரசாங்கத்தின் தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (NRHM) தனியார்மயக் கொள்கையைத்தழுவி தனியார் மருத்துவ மனைகளை ஊக்குவிக்க ஸ்டார் இன்சூரன்ஸை திமுக கொண்டுவந்தது அதற்கு கலைஞர் காப்பீட்டு திட்டம் என்று விளம்பரப் படுத்திக்கொண்டது. ஆட்சிக்கு வந்தவுடன் அஇஅதிமுக இதை எடுத்துவிட்டு யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் மூலம் ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம்’ 2012ஐ கொண்டுவந்தது. ரூ.72000 ஆண்டு வருமானம் கொண்ட மக்களுக்கு 4 வருடத்திற்கு தலா 1 இலட்சம் காப்பீட்டுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது மக்கள் வரிப்பணத்தில் ரூ.750 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி தனியார் மருத்துவமனைகள் 270க்கும், அரசு மருத்துவமனைகள் சுமார் 60க்கும் நோயாளிகள் செல்லலாம். பெரும்பாலும் தனியார் மருத்துவமனைகளையே மக்கள் நாடுவர் என்பதால் இந்தப் பணம் அவர் களுக்குத்தான் செல்லும். மேற் கொண்டு ஆகும் செலவையும் மக்களே செய்ய வேண்டும். 4 ஆண்டுகளுக்குப் பின் காப்பீட்டு திட்டத்தில் தொடர வேண்டுமானால் பிரிமியத் தொகையை மக்கள்தான் கட்டவேண்டும்.

மத்திய அரசாங்கத்திலும் தேசிய சுகாதார காப்பீட்டு திட்டம் NHIS செயல்படுகின்றது. எல்லா மாநிலங்களிலும் இத்தகைய திட்டங்கள் இருக்கின்றன. இவை உலகமயக் கொள்கையின் ஒருபகுதியாக உலகவங்கியால் கடன் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படு கின்றன. கலைஞர் காப்பீடு, முதல்வர் காப்பீடு முதல் அமெரிக்காவில் ஒபாமா காப்பீடு திட்டங்கள் வரை யாவும் ஒரே நோக்கம் கொண்டவையே. கட்டாயமாக இலவசமாக மருத்துவ சேவைபுரிய வேண்டிய அரசாங்கம், அரசு சுகாதார அமைப்பை படிப்படியாகத் தகர்த்து தனியார்மய மாக்குவதும் தனியார் மருத்துவ மனைகளை ஊக்குவிப்பதும் காப்பீட்டு திட்டத்தில் மக்களைப் பழக்கி அதில் தனியார் நிதி நிறுவனங்கள் முதலீடு செய்து இலாப மீட்டுவதும்தான் இத்திட்டங்களின் நோக்கம்.

## விலையில்லாத் திட்டங்கள் என்ற பெயரில் இலவசங்கள்

இந்தியாவிலேயே கவர்ச்சிகரமான இலவசங்கள் வழங்குவதில் தமிழகம் முன்னணி வகிக்கின்றதெனலாம். தேர்தல் நேரத்தில் டி வி, மிக்ஸி, கிரைன்டர், ஸ்டவ், லேப்டாப், சைக்கிள், இலவச அரிசி, ஆடு, மாடு, தங்கத் தாலி என இலவசங்கள் வாக்குறுதிகளாகத் தரப் படுகின்றன. இவற்றையெல்லாம் இனி ஏழைகள் யாரும் விலைகொடுத்து வாங்கவேண்டாமாம். ஆனால் சந்தையில் விலைபோகாத பல பொருட்களை அரசாங்கமே மக்கள் வரிப்பணத்தில் தொழில் நிறுவனங்களிட மிருந்து வாங்கி அவர்களுக்கு சந்தையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

## அம்மா உணவகமும், அம்மா குடிநீர் திட்டமும்

ஏழை எளிய மக்களுக்கு தரமான உணவை வழங்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். சாமானிய மக்கள் உணவருந்தும் ஓட்டல்களிலும் உணவுப் பண்டங்களின் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். இவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளாகும்.

ஆனால் மாநகராட்சிகளில் நடத்தப்படும் அம்மா உணவகங்கள் முழுமையாக அரசாங் கத்தால் நடத்தப்படவில்லை. அம்மா உணவகத்தை தனியாருக்கு டென்டர் விட்டு, மகளிர் சுய உதவிக்குழுக்களை பணியமர்த்தி உணவகங்களை நிர்வகிக்கின்றனர். அவற்றில் வழங்கப்படும் உணவு விற்கப்படும் விலையை விட அதிக செலவில் தயாரிக் கப்படுகிறது. கிட்டத்தட்ட 300 உணவகங்களுக்கு அரிசி பருப்பு போக அன்றாட செலவுக்காக ரூ.65,000/– மாநகராட்சி வழங்குகிறது. ஆக, ரூ4800 கோடியாக இருந்த உணவுக்கான மானியம் ரூ.5300 கோடியாக உயர்ந்துவிட்டது. இவ்வளவு பொருட்களும் மக்கள் வரிப் பணமும் இறுதியில் தனியாருக்கே சென் றடைகின்றன. விரைவில் இந்த உணவகங்கள், கார்ப்பொரேட் சோஷஷியல் ரெஸ்பான் சிபிலிடி (CSR) என்ற திட்டத்தின்கீழ் தனியார் ஏகபோக உற்பத்தி நிறுவனங்களின் பொறுப்பில் விடப்படும் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இதேபோன்று அம்மா குடிநீர் என்ற பெயரில் அரசாங்கமே குடிநீரை விற்கின்றது. இது தமிழ்நாடு அரசு விரைவுப் போக்கு வரத்து கழகத்தால் தயாரிக்கப்பட்டு அதன் வாகனங்களில் இலவசமாக ஏற்றிச் செல்லப் பட்டு அதன் ஊழியர்களால் பேருந்து நிலையங்களில் விற்கப்படுகின்றது. இவ்வளவிற்குப் பிறகும் அம்மா குடிநீர் எப்படி ரூ.10 ஆகும் என்ற கேள்வியும் எழுகிறது. அதைவிட முக்கியமான கேள்வி, மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் குடிநீர் வாரியங்கள் தரமான குடிநீரை இலவசமாக கொடுக்கவேண்டாமா? அரசாங்கமே குடி நீரை விற்கலாமா? பழுதின்றி செம்மையாக பேருந்துகளை இயக்குவது போக்குவரத்து கழகத்தின் கடமையா அல்லது குடிநீரை விற்பது அதன் வேலையா? போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு பணிச்சுமை கூடும் என்பதை அறிந்தும் இடதுசாரி எனக் கூறிக் கொள்ளும் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் கூட இதனை எதிர்க்கவில்லை.

அத்தியாவசியப் பொருட்களின், உணவு தானியங்களின்கொள்முதலும் வினி யோகமும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக எமது கட்சி கோரி வருகின்றது. அப்பொருட்களின்மீது அரசுக் கட்டுப்பாட்டை தளர்த்தக் கூடாது; அவற்றை பதுக்கல்காரர்களும் ஏகபோக வியாபாரி களும் கொள்முதல் செய்து வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்று கொழுத்த இலாபம் பெற அனுமதிக்கக் கூடாது; ஆன்லைன் ஊக வாணிபத்தை இதில் நுழைக்ககூடாது என மக்கள் கோரிக்கை எழுப்பி வருகின்றனர். இவற்றைச் செய்தாலே போதும். மக்கள் தங்கள் உணவை தாங்களே பார்த்துக் கொள்ள முடியும்.

## மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் இலவசத்திட்டங்கள்

இலவசங்களாலும் கிரமப்புற ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 100 நாள் வேலையில் கிடைக்கும் வருவாயினாலும் மக்கள் சோம் பேறிகளாகி விட்டனர் என்றும் விவசாயத் திற்கும் தொழிலுக்கும் ஆட்கள் வருவதில்லை என்றும் சில அறிவாளி முதலாளிகள் புலம்பு கின்றனர். ஏதோ இந்த முதலாளிகள் வருட முழுவதும் வேலையும் கண்ணியமான வாழ்க்கைக்குரிய ஊதியமும் கிராம மக்களுக்கு உத்தரவாதம் செய்துவிட்டது

போலவும் அதைத் தவிர்த்து மக்கள் இத்திட்டங்களால் சுகமாக வாழ்கின்றார்கள் எனவும் சித்தரிக்கின்றனர். உண்மையில் கிராமப்புற இளைஞர்கள் நகரங்களை நோக்கி படையெடுத்து ஏதாவது ஒரு வேலை கிடைக்காதா என்று அலைந்து கொண்டிருக் கின்றனர். இந்த இலவசங்களை மக்களா கோரிக்கை வைத்து போராடிக் கேட்டார்கள்? அவர்கள் கேட்ட ஜனநாயக கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? மக்கள் இலவசங்களால் சொகுசாக வாழ்கின்றார்கள் என்றால் வெறும் ரூ.10,000/ ஊதியம் கேட்டு ஏன் ஈரோடு மில் தொழிலாளிகள் போராட வேண்டும், பெருந்துறை சாயப் பட்டறைகளில் குறைந்த கூலிக்கு வேலைசெய்து விஷ வாயுவை முகர்ந்து ஏன் சாகவேண்டும்?

இந்த இலவசங்களை வாங்கச் செய்வதன் மூலம் மக்கள் மனங்களை ஆட்சியாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாசுபடுத்தி வருவ தையும் நாம் மறுக்கயியலாது. தங்கள் உரிமை களுக்காக போராடவேண்டும் என்ற போராட்ட உணர்வு உழைக்கும் மக்களிடம் இதனால் மழுங்கடிக்கப்படுகின்றது. இலவசங் களால் ஆட்சியாளர்கள் சமூகத்தில் உருவாக்கும் அபாயகரமான விளைவு இதுவேயாகும். தமிழகத்தின் இந்த இலவச திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்ற நினைக்கின்றார்கள் என்றால் அதன் உண்மையான நோக்கம் இதுவேயாகும்.

## வறண்டுவரும் விவசாயம்

திமுக, அஇஅதிமுக கட்சிகளின் ஆட்சிகள் கடைப்பிடித்த விவசாயக் கொள்கைகளால் 8.67 இலட்சம் விவசாயிகள் விவசாயத் தொழிலை விட்டு வெளியேறிவிட்டார்கள் என தமிழ்நாடு விவசாய சங்கங்களின் பேரவை கூறுகிறது. மிகப்பெரிய தொழில் நிறுவனங்களாலும் பன்னாட்டுக் கம்பெனி களாலும் தயாரிக்கப் படும் உரம், பூச்சிக் கொல்லி விதைகள் ஆகிய விவசாய இடு பொருள்களின் விலைகள் பன்மடங்கு உயர்ந்துவருகின்றன. ஆனால் விளை பொருளுக்கு நியாயமான கொள்முதல் விலையை அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை வெளிச்சந்தையிலும் இதே விலைக்குத்தான் விற்க இயலும்.. கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு பருத்தி போன்றவற்றிற்கு பணத்தைப் பெற ஆண்டுக் கணக்கில் அலைய வேண்டி யிருக்கின்றது. விற்ற விளைபொருளுக்கு பணம் கைக்கு வராதநிலை, திரும்பித் தர முடியாத கடன், மொத்தத்தில் நஷ்டம், இறுதியில் தற்கொலை என்பதே விவசா யத்தை நம்பி வாழும் கிராமப்புற மக்களின் நிலை.

ஆனால் விஷன் 2023இன்படி இன்னும் சில வருடங்களில் பன்னாட்டு ஏகபோகங்கள் நில வங்கிகளில் விவசாய பண்ணைகள் அமைத்து குளிர்ப்பதன குடோன்களில் விளை பொருட்களைச் சேர்த்துவைத்து தங்களால் நடத்தப்படும் சங்கிலித் தொடர் கடைகளிலும் (செயின் ஸ்டோர்கள்) மால்களிலும் கிடைக்கும் பொருட்களாக விவசாய விளைப்பொருட்களை மாற்றிவிடு




நெய்வேலியில், ஏ.ஜ.யு.டி.யு.சி மாநில சிறப்பு மாநாட்டில் மாநிலத் துணைத்தலைவர் தோழர் எஸ்.கணேசன்

வார்கள். மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத தேசிய நதிநீர் கொள்கை நீர்ப்பாச னத்தை தனியார் தனதாக்கிக் கொண்டு பராமரிக்க அனுமதிக்கின்றது. பாசன நீரையும் காசு கொடுத்து வாங்கும் நிலை வெகு

தூரத்தில் இல்லை. விவசாயம் இனி சாமானி யனுக்கல்ல பெரும் முதாலாளிகளுக்கே.

## தொழிலாளர் வாழ்நிலை

தொழிலாளர்களின் வாழ்நிலையும் மாநிலத்தில் மோசமாகி வருகின்றது. பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறைகளில் அவுட் சோர்சிங் மற்றும் ஒப்பந்தமுறை புகுத்தப்பட்டு நிரந்தரப் பணிகளும் தினக் கூலி வேலை களாக ஆக்கப்பட்டுவிட்டன. கட்டிடத் தொழில் போன்ற முறைசாராத் தொழி லாளர்கள் இதுவரை பெற்றுவந்த நலவாரிய உதவித்தொகைகள் அவர்களுக்கு இனி மேலும் கிடைக்காவண்ணம் வாரியத்திடம் பெறும் செயல்முறையில் பல நிர்வாக சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அலுமி னியம், பித்தளை, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் போன்ற தகடுகளின் கடும் விலையேற்றத்தால் பல தொழிலாளர்கள் வேலையின்றி அவதிப்படுகின்றனர்.

ஆட்டோ ஓட்டும் இட்சக்கணக்கான தொழிலாளர்கள் சமீபகாலமாகப்படும் கஷ்டத்தை வருணிக்கயியலாது. உரிமங்கள், பெயர் மாற்றங்கள், வருடா வருடம் ஃபிட்னஸ் சான்றிதழ்கள் என ஆர் டி ஓ அலுவலகங்களுக்கு தேவையைவிட அதிக மாக பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து அலைய வேண்டும். நேரடிக் கட்டணத்தைவிட டிரைவிங் ஸ்கூல் புரோக்கர்கள் மூலம் செல்வதால் நான்குமடங்கு அதிகச் செலவு செய்யவேண்டும். இதுபோக இலஞ்சமும் கொடுத்து அழவேண்டும். ஆட்டோ ஸ்பேர்பார்ட்ஸ், டிங்கரிங், வெல்டிங் என பராமரிப்புச் செலவுகள் ஏராளம். ஆட்டோ வாங்க வங்கிகள் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்துவந்தது சிக்கலானதால் தனியார் லேவாதேவிக்காரார்களிடம் கந்துவட்டிக்கு கடன் வாங்கி ஓட்டுனர்கள் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள்.

பல்வேறு முறைசார பணிகளில் ஈடுபட்டு பிழைப்பை நடத்திவரும் பெண் தொழி லாளர்கள் ஆணுக்கு நிகரானதைவிட குறைந்த கூலி பெருகின்றனர். அதற்கும் மேலாக பணியிடங்களில் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

## கைவிடப்பட்ட நெசவாளர்கள்

பல பத்தாண்டுகளாக கைத்தறி நெச வாளார்களுக்கு கைகொடுப்பார் யாரும் இன்றி கஞ்சித் தொட்டியை நாடும் நிலையே தொடர்கின்றது. நூல்விலையின் கடும் உயர்வாலும் மின்தட்டுப்பட்டாலும் நெசவுத் தொழில் நசிந்து குறைந்து கரைந்து வரு கின்றது. வங்கிகள் வழங்கி வந்த கடன்உதவி இன்று அநேகமாக இல்லை எனலாம். நெய்த துணிகளை கொள்முதல் செய்து விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களும் அரசாங்க ஆதரவின்றி படிப்படியாக குறைந்து வருகின்றன. இறுதியாக பொங்கல் இலவச



மேதினப் பொதுக் கூட்டம் ஏ.ஐ.யு.டி.யு.சி மாநில செயலாளர் தோழர் வி.சிவகுமார்

வேட்டி சேலைகள், அரசாங்கப் பள்ளிச் சீருடைகள் போன்றவற்றை நெய்து பிழைப்பை நடத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இதற்கும் நூலை உரித்த நேரத்தில் வழங்காமல் துணியை மட்டும் உரித்த நேரத்தில் கேட்டு நெருக்கடி கொடுக்கப்படுகிறது, நெய்த கூலியை அரசாங்கம் வழங்குவதில் தாமதம், வழக்கம் போல் அதிகாரிகளுக்கு கையூட்டு, அரசியல்

வாதிகளுக்கு கமிஷன் என விசைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை வேதனையும் போராட்டமும் நிறைந்து காணப்படுகின்றது.

## மாநிலத்தில் சட்டம் ஒழுங்கும், ஜனநாயக இயக்கங்கள் மீது அடக்குமுறையும்

மாநிலத்தில் எங்குபார்த்தாலும் செயின் திருட்டுகள் கட்சிக் குண்டர்களால் நில அபகரிப்புகள், பட்டப்பகலில் வீடுபுகுந்து கொலை கொள்ளை, வயதான மூதாட்டிகள் தாக்கப்பட்டு நகைபறிப்பு, வங்கிகளிலும் நகைக்கடைகளிலும் நூதனமுறை கொள் ளைகள் என நடக்கின்றன. ஒருபக்கம் காவல் துறையை அதிக பட்ஜெட் ஒதுக்கீடு செய்து நவீனமயமாக்குகின்றனர். மறுபக்கம் குற்றங் களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்கிறது. இதற்கான சமூக பொருளாதார காரணிகள் ஆராயப்பட்டு குற்றங்களின் ஆணிவேரைப் பிடுங்கி எடுக்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை

ஆனால் தமிழகம் 'அமைதிப் பூங்காவாக' காட்டப்படுகின்றது. உண்மையில் அமைதிப் பூங்கா என்பதற்கு அர்த்தம் காவல் துறையின் கரங்கள் இரும்பாக்கப்பட்டு மக்களின் ஜனநாயக குரல்வளை நசுக்கப்படுவது தானாகும். தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் ஏழை நடுத்தரமக்கள் மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் மக்கள்விரோத நடவடிக்கை களுக்கு எதிராகவும் மற்றும் குடிநீர்,சுகாதாரம், சாலைவசதி போன்ற அடிப்படை பிரச்சினை களுக்காகவும் மக்கள் ஒரு சிறிய போராட்ட அணியாகத் திரண் டாலும். அவர்களின் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் ஏன் உண்ணாவிரம் இருப்பதற்கும்கூட இங்கு அனுமதி மறுக்கப் பட்டுவருகின்றது. ஆங்கிலேய காலனி ஆட்சியாளர்களால் 1888ல் சென்னையில் கொண்டுவரப்பட்ட நகர்க்காவல் சட்டத்தின் 41, 41அ பிரிவுகள் 15 நாட்களுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் போடப்பட்டு ஆண்டு முழுதும் அமலில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படுகிறது. மாநிலம் முழுதும் எழுதப்படாத அவசரநிலை நிலவுகின்றது. எங்கேனும் மக்கள் திரண்டெழுந்து போராட முன்வருவார்களேயானால் அவர்களின் போராட்டங்களை முளையிலேயே கிள்ளி யெறிவதற்கான அனைத்து முயற்சிகளையும் காவல்துறை மேற்கொண்டு வருகிறது இத்தகைய ஒடுக்குமுறையின் உச்சத்தை கூடங்குளம் அணுஉலையை எதிர்த்துப் போராடிய மக்கள்மீதும் மற்றும் தலைவர்கள் மீதும் போடப்பட்ட ஏராளமான தேசதுரோக வழக்குகள், துப்பாக்கிச்சூடுகள், கைது நடவடிக்கைகள் மற்றும் ஆயுதப்படையைக் குவித்து மக்களை அச்சுறுத்தியது போன்ற அடக்குமுறை சம்பவங்களிலிருந்து நன்கு அறியலாம்.

## கொள்கை கோட்பாடற்று மதவாத சக்திகளை ஆதரிக்கும் திராவிடக் கட்சிகள்

மத்தியில் ஆட்சிசெய்யும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்த – தற்போது மீண்டும் ஆட்சிக்கு வரத்துடிக்கும் – பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் அடிப்படை பொருளாதார அரசியல் கொள்கைகளில் எந்த வேறுபாடும் இல்லை. அதேபோல் மாநிலத்தில் நடைமுறையில் இருக்கும் தனியார்மய முதலாளித்துவக் கொள்கை களிலும் திமுக, அஇஅதிமுக கட்சிகளிடையே வேறுபாடும் இல்லை. இக்கட்சிகள் வெளி யிடும் தேர்தல் அறிக்கைகளில் மக்கள் நலத்தைப் பிரதிபலிக்கும் மாற்றுக் கொள்கை எதுவுமில்லை. மக்களின் கோபாவேச உணர்ச்சிகளுக்கு தீனி போடக்கூடிய மேலோட்டமான கோஷங்கள் மட்டுமே இருக்கின்றன. மிகுந்த இழுபறிக்குப்பின் தேமுதிக, பாமக, மதிமுக கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஐஜேகே கட்சிகளுடன் சந்தர்ப்ப

வாத கூட்டணி அமைத்துள்ள பாஜக வெளியிட்ட தேர்தல் அறிக்கையும் வேறுபாடு கொண்டில்லை இக்கட்சிகள் முதலாளித் துவப் பொருளாதாரக் கொள்கைகளை அமல் படுத்துவது மட்டுமல்ல, அதற்கு எதிராக மக்கள் ஒன்றுபடுவதைத் தடுக்க மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலையும் ஆதரிக்கின்றன.

இந்தித் திணிப்பை எதிர்த்த மாணவர் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வந்த திமுகவும் அதிலிருந்து பிரிந்து வந்த அஇஅதிமுக, மதிமுக கட்சிகளும் இந்தியைத் தீவிரமாகத் திணிக்க நினைக்கும் பாஜகவுடன் கூட்டணிவைத்துக் கொள்ளத் தயங்குவதில்லை. மூடநம்பிக்கைக்கு எதிராக சீர்திருத்தம் பேசிய திராவிடக் கட்சிகள் ஜோசியம் ஜாதகம் வாஸ்து இவற்றை கல்லூரிப் பட்டயப்படிப்பாக்கி கல்வியை காவிமயமாக்கிய பாஜகவுடன் பதவியைப் பகிர்ந்துகொண்டன.

கிடைக்காத பல அரிய ஏட்டுச் சுவடிகளை பாதுகாத்து வைத்திருந்த யாழ்ப்பானப் பல்கலைக்கழக நூலகத்தை புத்த சிங்கள, மதவெறிக் கும்பல் தீக்கிரையாக்கியதைப் போலவும், பழம்பெரும் புத்தர் சிலையை ஆஃப்கானிஸ்தானின் தாலிபன்கள் தகர்த்து தரைமட்டமாக்கியதைப் போலவும் மத வெறியைக் கிளப்பி மக்களைப் பிளவுபடுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் முஸ்லீம்களின் பழமைவாய்ந்த மதச் சின்ன மான, இந்தியாவின் வரலாற்றுச் சின்னமு மான பாபர் மசூதியை இடித்து கொடுஞ் செயல் செய்தது சங்கப்பரிவாரங்கள்.

இவ்வாறு மதச்சார்பின்மைக்கும் மத நல்லிணக்கத்திற்கும் சகிப்புத்தன்மைக்கும் சவால் விட்ட சங்கப் பரிவாரங்களின் கட்சியான பாஜகவுடன் மாநிலக் கட்சிகள் கூட்டணி வைக்கத் தயங்கவில்லை. குஜராத்தில் முஸ்லீம் மக்கள் மீது இனப் படுகொலையை அவிழ்த்துவிட்டு இரத்த வெறியாட்டத்தை மோடி நடத்திக் கொண் டிருந்த பொழுது பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தில் இவர்கள் சொகுசாக பங்குவகித்துக் கொண்டிருந் தார்கள். இன்று அதே மோடி பிரதமராக வேண்டும் என்கிறார்கள்.

## சிபிஐ, சிபிஐ (மார்க்சிஸ்ட்) கட்சிகளின் நிலைப்பாடு

இடதுசாரி கட்சிகள் என அழைத்துக் கொள்ளும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ (CPI) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் CPI(M)ஆகிய இரண்டும் தாங்கள் ஆட்சி செய்த மேற்குவங்கம் கேரளா திரிபுரா மாநிலங்களில் கல்வி, மருத்துவம் போக்கு வரத்து மின்சாரம் போன்ற அனைத்திலும் உலகமய தாராளமய தனியார்மய கொள்கை களைப் பின்பற்றின. மக்கள் போராட்டங் களை நசுக்க காவல் துறையையும் கட்சி குண்டர்களையும் பயன்படுத்தின. சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக மேற்கு வங்க நந்திகிராமில் விவசாயிகளைச் சுட்டுவீழ்த்தின. சிங்கூரில் இந்திய ஏக போக பன்னாட்டு நிறுவனமான டாட்டாவின் நானோ கார் தொழிற் சாலைக்காக மக்கள் எதிர்ப்பைமீறி விளைநிலத்தை கையகப் படுத்தின.

மக்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து ஒன்றுபட்ட இடதுசாரி ஜனநாயக போராட்டங்களை நடத்த பலமுறை எமது கட்சி எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) அழைப்பு விடுத்தும், சிபிஐ, சிபிஐ (மார்க்சிஸ்ட்) போன்றவை செவிசாய்க்கவில்லை. மாறாக இக்கட்சிகள் மக்களுக்கான போராட்டப் பாதையைவிட்டு விலகி முதலாளித்துவ பாராளுமன்றப் பாதையில் தொடர்ந்து செல்கின்றன. காங்கிரஸ், பாஜக கட்சிகளை ஆதரித்துக் கொண்டிருந்த பல்வேறு மாநிலக் கட்சிகளுடன் மூன்றாவது அணி அமைக் கின்றன. உன்னத தத்துவமான கம்யூனிசம், இந்தப் போலி இடதுசாரிகளின் கைகளில்

சிக்கி அவமானப்படுவதுதான் உழைக்கும் மக்களுக்கு மிகுந்தவேதனை அளிக்கின்றது.

## ஆம் ஆத்மி கட்சியின் நிலைபாடு

ஊழல் எதிர்ப்பில் தீவிரமாக எழுந்த அன்னாஹசாரே இயக்கத்திலிருந்து பிரிந்து ஆம் ஆத்மி கட்சி தோன்றியது. சாதாரண மக்களின் (ஆம் ஆத்மி) நலனுக்காக இருப்ப தாகக் கூறிக்கொள்ளும் இக்கட்சி அதே சாதாரண மக்களின் துன்ப துயரங்களுக்குக் காரணமான முதலாளித்துவ உலகமய தனியார்மய தாராளமயக் கொள்கைகளை எதிர்க்கவேண்டும் என்பதே ஒருவரின் எதிர்பார்ப்பாகும். ஆனால் அதன் தலைவர் அரவிந்த் கேஜரிவால் தான் 'முதலாளித் துவத்தை எதிர்க்கவில்லை' என இந்தியத் தொழில் கூட்டமைப்பிடம் (CII) தெரிவித் திருப்பது அவரது கட்சியின் நிலைபாட்டை தெளிவாகக் காட்டுகிறது.

## மக்கள் முன் உள்ள ஓரே மாற்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

ஆகவே இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் பல்வேறு கட்சிகளும் கூட்டணிகளும் இருந் தாலும்கூட உண்மையில் இரண்டு வர்க்க சக்திகளும், இரண்டு அரசியலும்தான் மக்கள் முன்பு இருக்கின்றன. ஒருபுறம் சுரண்டல் பூர்ஷ்வா வர்க்கத்தின் நலனைப் பிரதி பலிக்கும் காங்கிரஸ், பிஜேபி, அதிமுக, திமுக, சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள் மற்றொருபுறம் சுரண்டப்படும் தொழிலாளர்கள், விவ சாயிகள் மற்றும் பரந்துபட்ட துன்பப்படும் மக்கள் நலனைப் பிரதிபலிக்கும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி இவைதான் இருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரரும் இக்கால கட்டத்தின் தலைசிறந்த மார்க்சிச சிந்தனை யாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் எமதுகட்சி 1948இல் தோற்றுவிக்கப்பட்டது இன்று 20 மாநிலங் களில் செயல்பட்டுவரும் எமதுகட்சி மக்கள் வாழ்வின் எரியும் பிரச்சினைகளை முன் நிறுத்தி உயர்ந்த கலாச்சார, நீதிநெறி, ஒழுக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில் முதலாளித் துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியைநோக்கி மக்கள் ஜனநாயக இயக்கங்களை கட்டி வருகின்றது. சமீபத்தில் விலைவாசி உயர்வு, கல்வி வியாபாரமயம், விவசாய நில அபகரிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 3.5 கோடி மக்களின் எதிர்ப்புக் கையெழுத்துகளைப் பெற்று லட்சம் பேரை அணிதிரட்டி பாராளுமன்றம் முன்பு பிரமாண்ட பேரணியை நடத்தி பிரதமரிடம் கோரிக்கை மனுவையும் சமர்ப்பித்தது. பாராளுமன்றத்திற்கு வெளியில் நடைபெறும் வெகுஜனப் போராட்டங்களின் குரலை பாராளுமன்றத்திற்குள்ளும் பிரதிபலித்து வருகின்றது. மக்கள்நலன் என்ற போர் வையில் ஆளும் வர்க்கக் கட்சிகளால் தொடர்ந்து மக்களுக்கெதிராக தொடுக்கப் பட்டுவரும் தாக்குதல்களை அனைத்து வகையிலும் தடுப்பதற்கான போராட்டப் பாதையில் எமது கட்சி தொடர்ந்து முன்னணியில் இருந்துவருகிறது. எமது கட்சியின் ஜாய்நகர் தொகுதியின் எம்.பி ஆன டாக்டர் தருண் மண்டல் அவர்கள் தொகுதி மக்களின் பல்வேறுபட்ட கோரிக்கை களுக்கான போராட்டங்களை முன்னின்று நடத்தி வருவதுடன், மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் எங்கு நடப்பினும் அதற்கு அதரவளிப்பதுடன் பாராளுமன்றத்தின் அவைகளில் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் வந்திருக்கிறார். ஆளும்வர்க்கத்தின் கட்சி களால் தொடர்ந்து நிறைவேற்றப்படும் மக்கள்விரோத, கல்விவிரோத, தொழிலாளர், விவசாயிகள் விரோத மசோதாக்கள் அனைத் தையும் எதிர்த்து வாக்களித்தும் வந்திருக் கிறார். பாரளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்விற்கான மசோதா நிறைவேற்றப்பட்ட போது அதனை எதிர்த்து வாக்களித்த ஒரே எம்பி திரு தருண்மண்டல் அவர்கள் மட்டும்தான்.

மக்கள் வாழ்வின் அடிப்படைப் பிரச்சினைகளுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் தொடர்ந்து அகிலஇந்திய அளவிலும் மாநில அளவிலும் பகுதி அளவிலும் போராட்ட இயக்கங்கள் நடத்தி வரும் அதே வேளையில் மக்களின் போராட்டக்குரலை பாராளுமன்றத்திற்குள்ளும் எதிரொலிக்கச் செய்யும் இலக்கோடு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி நாடு முழுவதும் **16** மாநிலங்களில் **82** தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. தமிழகத்தில் வடசென்னையில் தோழர் வி சிவகுமார், தென்சென்னையில் எஸ் கணேசன், தேனியில் ம ஜெ வால்டேர் ஆகிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எங்கெல்லாம் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்களோ அங்கு எமது கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வெற்றியடையச் செய்யுமாறு மக்களை வேண்டுகிறோம். எமது கட்சி போட்டியிடாத தொகுதிகளில் நேர்மையான, சமூக உணர்வு கொண்ட, மக்களது ஜனநாயக உரிமைகளுக்காகவும் பிரச்சினைகளுக்காகவும் போராடுவோரை மக்கள் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்தகைய வேட்பாளர்கள் இல்லாதிருப்பின் ஜனநாயகப் போராட்டங்களுக்கான மக்கள் கமிட்டிகளை ஏற்படுத்திஅதன் பிரதிநிதிகளை வேட்பாளர்களாக நிறுத்தி அவர்களை ஆதரித்து வெற்றியடையச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

**மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்திவாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களைக் கட்டுவோம்!**

**ஒன்றுபட்ட மக்கள் போராட்ட இயக்கங்களை வலுப்படுத்த எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வோம்!**

# கேரளாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆர்எம்பி, எம்சிபிஐ(யு) ஆகிய கட்சிகளடங்கிய இடது ஐக்கிய முன்னணி LUF அமைப்பு

இந்தியாவில் முதன்முதலாக காங்கிரஸ் அல்லாத அதுவும் ஒரு இடதுசாரி அரசாங்கம் அமைந்த ஒரு பெருமைக்குரிய மாநிலம் கேரளமாகும். ஆனால், கவலைதரும் வகையில் காங்கிரஸிற்கும் அவ்விடதுசாரி அரசாங்கத்திற்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லாமல் போனதை வெகு விரைவிலேயே மக்கள் காணநேர்ந்தது.

இந்நிலையில், மத்திய–மாநில அரசாங்கங்களின் மக்கள் விரோத கொள்கைகள், உலகமயம், ஊழல், வகுப்பு வாதம் மற்றும் குறிப்பாக வன்முறை அரசியல் ஆகியவற்றிற்கு எதிராக மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்), புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி (RMP), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் இந்தியா (யுனைட்டெட்) (MCPI(U) ஆகிய இடதுசாரி கட்சிகள் இணைந்து மாநில அளவிலான இடது ஐக்கிய முன்னணியை (LUF) ஏற்படுத்தியுள்ளது.

மாநிலத்தில் **18** பாராளுமன்றத் தொகுதிகளில் **18**ல் தனது வேட்பாளர்களை எல்யுஎஃப் (LUF) நிறுத்துகிறது. அதில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) **5**, எம்சிபிஐ(யு) **3**, ஆர்எம்பி **9**, எல்யுஎஃப் ஆதரவுபெற்ற சுயேட்சை வேட்பாளர் ஒருவரும் போட்டியிடுகின்றனர். நமது கட்சி வேட்பாளர்கள் திருவனந்தபுரம், பத்தினம்திட்டா, மாவெளிக்கரா, ஆலப்புலா மற்றும் கோட்டயத்தில் போட்டியிடுகின்றனர். மார்ச் **12, 2014** அன்று ஆலப்புலாவில் எல்யுஎஃப் அமைக்கப்பட்டதை அறிவிக்கும் மாநில மாநாடு நடத்தப்பட்டது. இம்மூன்று கட்சிகளின் தொண்டர்கள் தவிர பொதுமக்களும் மிக உற்சாகத்துடன் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்.பி டாக்டர் தருண் மண்டல் மற்றும் எம்எல்ஏ தருண் நஸ்கர் ஆற்றிய பணிகளில் சில...


டாக்டர் தருண் மண்டல்

நாடாளுமன்றத்தில் இருக்கும் **542** எம்.பி க்களில் **315** பேர் பல நூறு கோடிகளுக்கு அதிபர்களாக இருக்கிறார்கள். அப்படி இருந்தும் எம்பிக்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் சலுகைகள் குறித்த பரிந்துரையை அவையில் காங்கிரஸ் முன்வைத்த போது ஆளும் கட்சியிலிருந்தும் சரி, எதிர்க்கட்சியிலிருந்தும் சரி எந்த ஒரு எம்பி க்கும் இதை எதிர்க்கவேண்டும் என சற்றும் உறைக்கவில்லை மேற்கு வங்கத்தின் ஜாய்நகர் தொகுதி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்பி தோழர் டாக்டர் தருண் மண்டலைத்தவிர! ஊதிய உயர்வை இவரால் தடுக்கமுடியவில்லை எனினும் தனது ஊதியத்தில் பாதியை தொகுதி மாணவர்களின் கல்விக்காக மாத உதவித்தொகையாகவும் மீதியை இலவச மருத்துவ முகாம்கள் நடத்தவும் அவர் செலவிடுகின்றார். ஜாய்நகர் சட்டமன்றத் தொகுதி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம் எல் ஏ தருண் நஸ்கரும் இவ்வறு தனது ஊதியத்தை செலவிடுகின்றார். ஏழை எளிய தொகுதி மக்களின் தேவைகளையும் நிவாரணங்களையும் பெற்றுக்கொள்ள இவர்கள் பதவியைப் பயன்படுத்தி அனைத்து உதவிகளையும் செய்கின்றனர். வீட்டு வேலைக்குச் செல்லும் பணிப்பெண்கள் முதல் அன்றாட கூலித் தொழிலாளிகளின் தினசரி இரயில் பயணத்திற்கு டிக்கெட் விலையில் டாக்டர் மண்டல் சலுகை பெற்றுத் தந்ததை குறிப்பிட வேண்டும். உழைக்கும் மக்கள் போராட்டம் ஜாதி மத இன மொழி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்ற பாட்டளிவர்க்க அணுகுமுறையின்படி, கன்னியாகுமரியில் கூடங்குளம் அணு உலையை எதிர்த்த மக்கள் போராட்டத்தில் பங்கு பெற்றார். உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாயகன் ஒபாமாவை ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியம் கொண்ட இந்திய மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் நாடாளுமன்றத்திற்கு வரவேற்றதை எதிர்த்தவரும் இவர் ஒருவரே.

# பீகாரில் 6 இடதுசாரி கட்சிகள் கூட்டணி

*பீகாரில் 6 இடதுசாரி கட்சிகளான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), சிபிஐ (மா,லெ), எம்சிபிஐ(யு), ஃபார்வர்டு பிளாக் (ரெவலுசனரி), பிஆர்சி மற்றும் சிசிஐ* [SUCI(C), CPI(ML), MCPI (U), FB (Revolutionary), PRC & CCI] *ஆகியவை இணைந்து கூட்டணி அமைத்துள்ளன. இக் கூட்டணி, நமது கட்சி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)* SUCI(C) *சார்பில் 4 வேட்பாளர்களையும்* CPI(ML) *சார்பில் ஒருவரையும் களத்தில் நிறுத்தியுள்ளது. மக்கள் விரோத முதலாளித்துவ ஆதரவு கூட்டணிகளான காங்கிரஸ் தலைமையிலான* UPA*வையும் பாஜக தலைமையிலான* NDA*வையும் மக்கள் தோற்கடிக்க வேண்டும் என்றும் பிராந்திய பூர்ஷுவாக்களின் பிரதிநிதிகளான பல்வேறு மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி வைத்திருக்கும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் மூன்றாவது கூட்டணியையும் முழுமையாக புறக்கணித்தது இக்கட்சிகளின் 'இடது சாரி' முகத்திரையை கிழிக்கவேண்டும் என்றும் இந்த 6 கட்சி கூட்டணி கேட்டுக் கொண்டுள்ளது. இந்த புதிய கூட்டணியின் சார்பில் போட்டியிடும் ஜனநாயகப் போராட்டங்களில் பரிசோதிக்கப்பட்ட, முற்போக்கு புரட்சிகர வேட்பாளர்களை தேர்ந்தெடுக்குமாறும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பீகார் மாநில அமைப்புக் கமிட்டி அறைகூவல் விடுத்திருக்கின்றது.*

# மோடிக்கு எதிராக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர்

குஜராத்தில் மோடி போட்டியிடும் வதோதரா தொகுதியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் வேட்பாளர் தபன் தாஸ் குப்தா போட்டியிடுகின்றார். பாராளுமன்ற தேர்தலில் மூன்றாவது முறை நிற்கும் இவர், இதற்கு முன்பு இதே தொகுதியில் 2004 லிலும் 2005 திலும் போட்டியிட்டிருக்கின்றார். மோடிக்கு எதிராக 5000 திற்கும் சற்று மேலாக வாக்குகளைப் பெற்றிருக்கிறார். 20 ஆண்டு களுக்கும் மேலாக சமூகப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் இவர் தொகுதியில் நிலவும் உண்மையான மக்கள் பிரச்சினைகளான குடிநீர் பிரச்சினை, ஊழல், மகாத்ம காந்தி பல்கலைக்கழகத்தின் மோசமான நிர்வாகம், அட்லாதராவில் குறைபாடுகளுடன் கட்டப் பட்ட இரண்டு கட்டிடங்கள் இடிந்து விழுந்த பிரச்சினை, விலைவாசி உயர்வு போன்ற வற்றை தேர்தல் பிரச்சாரத்தில் எழுப்புவார் என எமது கட்சி உறுப்பினர் பவிக் ராஜா தெரிவித்துள்ளார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் குஜராத் மாநிலச் செயலாளர் துவாரிகா நாத் ரத் பத்திரிகையாளர்களிடம் அளித்த பேட்டியில் ‘மக்களின் எதிர்பார்ப்புகளை காங்கிரஸ் நிறைவேற்றத் தவறிவிட்டது. மோடியின் அரசாங்கம் விவசாயிகளிட மிருந்து நிலங்களைக் கையகப்படுத்தியதை எதிர்த்தும் மருத்துவச் சிகிச்சையை தனியார் மயப்படுத்தியதை எதிர்த்தும் காங்கிரஸ் எதுவும் செய்யவில்லை. இந்த இரண்டு கட்சி களுமே பணம் கொழுத்த வியாபாரிகளுக்கே துணைபோகின்றன, ஏழைகளுக்கு அல்ல‘ என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக்கப்பூர்வமான அரசியல் செயல்பாடு களை நம்புகிறோம் என்றும், வெற்றி தோல்வி யல்ல நமது பிரச்சினை, இந்த செயல்பாடுகள் மூலம் மக்களின் விழிப்புணர்வுக் கண்களைத் திறப்பதே எமது நோக்கம் என எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் குஜராத் மாநிலச் செய லாளர் துவாரிகாநாத் ரத் பத்திரிகையாளர் களிடம் குறிப்பிட்டுள்ளார்.

# ஆந்திராவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம்சிபிஐ(யு) கூட்டணி

ஆந்திராவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), எம்சிபிஐ(யு) இணைந்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றன. இக்கட்சிகள் இணைந்து ஏப்ரல் 1 அன்று வெளியிட்ட அறிக்கையில் சிபிஐ, சிபிஐ(எம்) போன்ற இடதுசாரிகள் சந்தர்ப்பவாதத்தில் மூழ்கிவிட்டதால் உண்மை யான இடதுசாரி ஜனநாயக இயக்கத்தின் தேவையை பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. கூட்டணி சார்பில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) 2 பாராளு மன்றத் தொகுதிகள், 4 சட்டமன்றத் தொகுதி களில் போட்டியிடுகின்றது.

**வடசென்னை**



**தோழர் வி சிவக்குமார்**

தோழர் வி சிவக்குமார் (50) எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் கடந்த 27 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார். இவர் கெமிக்கல் இன்ஜினியரிங் படித்தவராவர். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினராக இருந்து வருகிறார். இவர் இந்தியாவின் ஒரே புரட்சிகரத் தொழிற்சங்க அமைப்பாகிய அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC) யின் மாநிலச் செயலாளர் பொறுப்பு வகித்து உலகமயம், தனியார் மயம், தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து AIUTUC அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் நடத்திய பல்வேறு போராட்டங்களில் முன்னணியில் நின்று பணியாற்றிவருகிறார். மேலும் சென்னை மாநகரில் குறிப்பாக வடசென்னையில் குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் பிரச்சினைகளின் பல்வேறு போராட்டங்களில் தொடர்ந்து முனைப்போடு பங்கெடுத்து வருகிறார். இதற்கு முன்னதாக 2009 பாராளுமன்றத் தேர்தலிலும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் 2 முறையும் இவர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டுள்ளார்.

**தென்சென்னை**



**தோழர் எஸ் கணேசன்**

தோழர் எஸ் கணேசன் (57) எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் கடந்த 34 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார். இவர் ஒரு சிவில் இன்ஜினியரிங் பொறியாளர். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினரான இவர் இந்தியாவின் ஒரே புரட்சிகரத் தொழிற்சங்க அமைப்பாகிய அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC) யின் மாநிலத் துணைத் தலைவர் பெறுப்புவகித்து உலகமயம், தனியார்மயம், தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து AIUTUC அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் நடத்திய பல்வேறு போராட்டங்களில் முன்னணியில் நின்று பணியாற்றி வருகிறார். சென்னையில் மக்களின் அடிப்படை வசதிகளுக்காக கட்சி நடத்திய பல்வேறு மக்கள் போராட்டங்களில் முன்னிலையில் நின்று பணியாற்றியவர்.

**தேனி**



**தோழர் ம ஜெ வால்டேர்**

தோழர் எம் ஜெ வால்டேர் (45) எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் 21 ஆண்டுகளாக முழுநேர ஊழியராக பணியாற்றி வருகிறார். எம் ஏ பட்டதாரியான இவர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மதுரை–திண்டுக்கல்–தேனி மாவட்ட அமைப்புக்கமிட்டி உறுப்பினர் பொறுப்பில் இருந்து மதுரை–திண்டுக்கல்– தேனி மாவட்டத்தின் ஏழை நடுத்தர மக்கள் மற்றும் விவசாயிகளின் பல்வேறுபட்ட கோரிக்கைகளுக்கான போராட்டங்களை அணிதிரட்டுவதில் முன்னணி பங்காற்றிவருகிறார். கட்சியின் வெகுஜன அமைப்பான அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) வின் மாநில அமைப்புக் கமிட்டிச் செயலாளராகவும் அகில இந்திய செயற்குழு உறுப்பினராகவும் இருந்து கல்வியை தனியார்மயம், வியாபாரமயம், காவிமயமாக்கும் கல்விவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக AIDSO அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் தொடர்ந்து நடத்திவரும் பல்வேறு இயக்கங்களில் முன்னணிப்பங்காற்றி வருகிறார். இதற்கு முன்பு 2006 சட்டமன்றத் தேர்தலில் தேனி தொகுதியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டுள்ளார்.

# கோரிக்கைகள்

- மக்கள் வாழ்வைச் சூறையாடும் உலகமய தாராளமய தனியார்மய கொள்கையை கைவிடு!
- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து. அத்தியாவசியப் பொருட்களின் கொள்முதலையும் விநியோகத்தையும் அரசே மேற்கொள். ரேசன் கடைகளை அதிகமாகத் திற !
- சில்லரை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை நிறுத்து !
- அரசு, பொதுத்துறை காலிப்பணியிடங்களை நிரப்பு. நிரந்தரப் பணிகளை ஒப்பந்தமுறைக்கும் அவுட்சோர்சிங் முறைக்கும் மாற்றாதே !
- கல்வியை, மருத்துவத்தை வியாபாரமயமாக்காதே. அரசுப் பள்ளி, கல்லூரிகளை அதிகமாகத் திற !
- விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை அரசே கட்டுபடியான விலையில் கொள்முதல் செய் !
- மதுக்கடைகளை மூடு ! இன்டெர்நெட் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் பாலியல் கலாச்சாரப் பரவலை தடைசெய் !
- சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு விவசாய நிலங்களை அபகரிக்காதே. மக்களுக்கு வரிச் சுமையை ஏற்றி சி. பொ. மண்டல நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்காதே !
- நெடுஞ்சாலைப் போக்குவரத்து சுங்க வரிவசூலை கைவிடு !
- மதவாத சாதியவாத மற்றும் மக்களைப் பிளவுபடுத்தும் சக்திகளை தடைசெய் !
- பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு மீது அரசு கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவா !
- ஊழலை ஒழித்துக்கட்டு. ஊழலில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனை கொடு !
- ஜனநாயகரீதியான விவாதங்களை நடத்தி மக்களின் முழு ஒப்புதலைப் பெறாமல் கூடங்குளம் அணுமின்திட்டம், செய்யார் அனல்மின்திட்டம் போன்ற மெகா திட்டங்ளை நிறைவேற்றாதே !
- நிர்வாகத்தையும் காவல்துறையையும் ஏவி ஜனநாயக இயக்கங்களை நசுக்காதே !

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channe
Posted on:
Publication 9th April 2014

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of
Newspapers for India No : 62018/88

# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்திவாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்க

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்)

# வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வீர்!



**தேனி**

**தோழர்**
**ம ஜெ வால்டேர்**

**வடசென்னை**

**தோழர்**
**வி சிவக்குமார்**





**தென்சென்னை**

**தோழர்**
**எஸ் கணேசன்**

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி பி நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in